76

மலர் 18
இதழ் 8

ஜகன்மோகினி

ஆசிரியை :
வை.மு.கோதைநாயகி அம்மாள்

PHONE:
86019.

14 OCT 1941
MADRAS

தயாநிதி

76

(தொடர்ச்சி)

76

மற்ற முக்கிய அம்சங்கள்

வனிதா மண்டலம்—வை. மு. கோ.

எதிர்பாராத அநுபவம்—வை. மு. ஸ்ரீ.

சித்திர ரகளை—"சித்தி(ரை)ர வதை"—கார்த்திகை.

விகட வேடிகள்—'விருச்சிகம்'

க்ஷேமலாபங்கள்—ஆசிரியை.

புதிய நாலணு பிரசுரம்

விவரங்களுக்கு உள்ளே பார்க்கவும்.

சிவசமுத்திரம் நீர் வீழ்ச்சி

4 போடோ படங்கள் : : "ஸ்ரீவத்ஸன்."

JAGANMOHINI

3C
m211,N22JM
M41.18.8
183056

தயாநிதி
(தொடர்ச்சி)

அணு 2
காசு 12

...மோகினி காரியாலயம், சென்னை.

சிவசமுத்திரம் நீர் வீழ்ச்சி—"ஸ்ரீவத்ஸன்."



ஸ்ரீராமஜெயம்.

ஜகன்மோகினி

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு. —திருவள்ளுவர்.

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி! மனத்தைச் சார்ந்து. —ஸ்ரீ வீரராகவ கவி.

மலர் 18	விஷு ௵ ஆடி ௴ ஆகஸ்டு 1941	இதழ் 8

OFFICE OF THE REGISTRAR OF BOOKS 14 OCT 1941 MADRAS

சாவேரி—ராகம் :

பல்லவி

எத்தனை சொன்னாலுங் கேளாதவென் (எத்)
பித்த மனமே!

அனுபல்லவி

அத்தன் அரங்கனை நித்தமும் நினையென்று (எத்)

சரணம்

வித்தகன் விமலன் பத்தர்கள் பரவசம்;
உத்தமன் உறவை உன்னிடு வோர்க்குச்
சித்த மிரங்கியே முத்தி யளித்திடும்
பித்தனைப் பெற்றும் நீ பிணங்கலாகுமோ? (எத்)

—"பித்தன்."

18256

முக்கிய அறிவிப்பு—அவசியம் கவனிக்கவும்

மேற்படி தலைப்பின்கீழ் சென்ற இரண்டு இதழ்களில் உள்ளட்டையில் வெளியான 5 விஷயங்களையும் தயவுசெய்து கவனிக்கக் கோருகிறோம்.

ஆத்மசக்தி	ரூ 1 4 0	ரூ 2 (போஸ்டல் ஆர்டர் 3 ஷிலிங்) அனுப்புவோருக்கு தபாற் செலவு இனும்.
கருணாலயம்	1 0 0	
மாதவமணி	0 4 0	

உங்கள் ஊரில்

எமக்கு ஏஜண்டு இல்லையாயின் தயவுசெய்து செல்வாக்குள்ள நியூஸ் ஏஜண்டின் விலாசத்தை நமக்குத் தெரிவித்தோ அல்லது அவர்களை நமக்கு எழுதச் செய்தோ உதவி புரியக்கோருகிறோம்.

க்ஷேமலாபங்கள்

'மோகினி' அன்பர்களுக்கோர் சந்தோஷச் செய்தி!

அன்பர்களே!

"உளுத்த இதயத்திற்குப் பின் இன்னும் ஏன் சின்ன புத்தகம் எழுதவில்லை?" என்று பல அன்பர்கள் கடிதம் எழுதுகிறார்கள்; பலர் நேரில் கேட்கிறார்கள். எல்லோருடைய அன்பான விருப்பத்தை முன்னிட்டு இப்போது சிறு புத்தகம் ஒன்று தயார் செய்துவருகிறோம். அடுத்த ஸெப்டம்பர் மாதத்துச் சஞ்சிகையுடன் அது விற்பனைக்குத் தயாராகிவிடுமென்பதைச் சந்தோஷத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரே கதையாக இருப்பதைவிட சிறு கதைகள் நிறைய சேர்த்த ஒரே மாலையாக இருந்தால் மிகவும் ரஸமாகவிருக்கும் என்று பலர் அபிப்பிராயப்படுவதால் அம்முறையிலேயே தயாராகிறது. புத்தகத்தின் பெயர், விலை முதலிய விவரங்கள் அடுத்த இதழில் வெளியாகும். நான்கணா ஸ்டாம்பாகவோ, அல்லது ஒரே ஊரில் உள்ள சிலர் சேர்ந்து மொத்தத்தை மணியார்டராகவோ, அனுப்பினால் தபால்செலவு இனமாக அனுப்பப்படும்.

ஒருவேளை புத்தகத்தின் அளவு பெரிதாகி விலை அதிகப்படினும், முன்னடியே அனுப்பியவர்களுக்கு அதே நாலணா விலைக்கே கொடுக்கப்படும் என்பதைக் கவனிக்கவும்.

நிற்க, நமது மோகினியில் "வாணியின் பிரஸாதம்" என்ற தலைப்பில் நமது ஸாஹித்யங்களுக்கு அபூர்வமான ராகங்களை அழகாக அமைத்து ஸ்வரப்படுத்தி உதவிவரும் நாதஸ்வர வித்வான் ஸ்ரீ. ஏ. பார்த்தஸாரதி அவர்களுக்கு சென்றமாதம் பலஇடங்களில் நாதஸ்வர கச்சேரிகள் இருந்ததால் ஸ்வரப்படுத்தி எழுத அவகாசப்படாமல் இம் மலரில் சங்கீதப் பகுதி நின்றிருக்கிறது. இதனை நேயர்கள் குறைபடாமல் பொறுக்கவேண்டுகிறேன். அடுத்த இதழ் முதல் 'வாணியின் பிரஸாதம்' வழக்கம்போல பிரசுரமாகும். அனேக அன்பர்கள் தமிழ் கீர்த்தனம் வேண்டுமென்று எழுதுவதால் அடுத்த இதழ் முதல் தமிழ் கீர்த்தனங்களே வெளிவரும்.

"ரேடியோ டயரி சென்ற மாதம் ஏன் போடவில்லை?" என்று ரேடியோ அன்பர்களில் சிலர் எழுதுகிறார்கள். 'நித்யானந்தர்' பெரும்பாலும் ஊரிலில்லாததால் சென்ற இதழிலும் இவ்விதழிலும்கூட டயரி வரவில்லை. அடுத்த இதழ்முதல் அதுவும் சரிவர வெளியாகும்.

புதிதாக வெளியிடப்போகும் சிறு கதைப் புத்தகத்திற்கு நேயர்கள் நான்கணாவை (இரண்டு கூபன்களை) அனுப்பி வழக்கம் போல உத்ஸாகப்படுத்தும்படி மீண்டும் வேண்டுகிறேன்.

இங்ஙனம்
நன்றியுள்ள,

வை. மு. கோதைநாயகி.

எதிர்பாராத அனுபவம்

(வை. மு. ஸ்ரீ.)

அம்மாதிரியான அனுபவம் ஏற்படுமென்று நாங்கள் ஒருவரும் எதிர்பார்க்கவே இல்லை. கனவில்கூட நினைக்கவில்லை. அன்று காலையில் நாங்கள் போட்ட திட்டம் ஒன்று. அன்று நடந்தது வேறு. நாமொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைக்கும் என்ற சொல் எவ்வளவு அனுபவ பூர்வமான உண்மை என்பது அன்று வெட்ட வெளிச்சமாக ஏற்பட்டது. ஏழு மணி நேரத்திற்குள் எப்பேர்ப்பட்ட அனுபவமும், எத்தனைவித உணர்ச்சிகளும் ஏற்பட்டனவென்பதை இப்போது நினைத்துப் பார்த்தால் மனதில் ஆனந்தமும், ஆச்சரியமும் இன்னும் பல்வேறு உணர்ச்சிகளும் அல்லவா தோன்றுகின்றன! மைசூர் அல்லது சிவசமுத்திரம் என்ற பெயர் காதில் விழும்போதெல்லாம் அன்றைய சம்பவமே உடனே நினைவிற்கு வருகிறது. மனத் திரையில் அந்த காட்சி ஒரு கணப் பொழுதில் நடிக்கப்பட்டு விடுகிறது. அடுத்த நிமிடம் என்ன நடக்கும் என்று தெரியாத மானிடரின் வாழ்க்கையில் இம்மாதிரி எதிர்பாராத அனுபவங்கள் ஏற்படுவது பரந்தாமனின் அதியற்புத லீலா விநோத மகிமை சிருஷ்டி யல்லவா ?

* * *

மைசூரில் நாங்கள் தங்கியிருந்த இடத்திற்கும் ஜகன்மோஹன் அரண்மனைக்கும் வெகு தூரமில்லை. அன்றைய தினத்திற்கு நாங்கள் நிறுவிய திட்டம் ஷை அரண்மனையையும், அதிலுள்ள அரிய பொருள்களையும் நிதானமாகப் பார்ப்பது; பிறகு ஊரைச் சுற்றிப் பார்ப்பது; மாலையில் கிருஷ்ணராஜ ஸாகரம் செல்வது என்பதே. ஆனல் அன்றைக்கு நடந்ததோ வேறு. மேற்கூறிய எதையும் செய்யவே யில்லை. காலை 9-மணிக்குமேல் அன்றே சிவசமுத்திரம் சென்று வருவதென திடீரென ஏகமனதாகத் தீர்மானித்தோம்.

* * *

நானும் என் நண்பர்களில் ஒருவருமாக பஸ் ஸ்டாண்டிற்குச் சென்று அரை டஜன் பேருக்கு இடமிருக்கிறதா வென்றும், கட்டணம் எவ்வளவென்றும், எத்தனை மணிக்குப் புறப்படுகிறதென்றும் விசாரித்தோம். ரிஸர்வ் செய்தால்தான் ஆறு பேர்களுக்கும் இடம் கிடைக்குமென்றும், மொத்தம் 15 ரூபாய் தான் கொடுக்கவேண்டுமென்றும், சுமார் 11-மணிக்கு வண்டி புறப்படுமென்றும் தெரிவித்தார்கள். நாங்கள் விசாரிப்பதைக் கவனித்துக்கொண்டிருந்த டாக்ஸி ட்ரைவர் ஒருவர் நாங்கள் சிறிது தூரம் வந்ததும் எங்களை அணுகி பின் வருமாறு சொன்ஞர். "ஸார்! நம்ம வண்டியை வந்து பாருங்கோ ஸார். இந்த ஊரிலேயே இதுமாதிரி வண்டி கிடையாது. லேடெஸ்ட் மாடல். ஏழுபேர் உட்காரலாம். ஸ்ப்ரிங் மெத்தை போட்டிருக்கு. புது வண்டி. சிரமமில்லாமே சௌக்கியமா போயிட்டு வரலாம். நீங்க ஆறு பேரு இருக்கறத்திஞலே ரொம்ப ஜோரா பேசிகிட்டே பாடிகிட்டே போய்வரலாம். இப்பவே புறப்பட்டுடலாம். 11மணி வரை காக்கவேண்டாம். பஸ்ஸுக்கு என்ன சார்ஜோ அதையே கொடுங்கோ. எனக்கு ஒரு ரூபா இனம் குடுத்துடுங்க. போறவழியிலே இரண்டு டோல் கேட்டுக்கு 2 ரூபா கட்டிடுங்க. இவ்வளவுதான். துளி செலவே பாக்காதிங்க. நம்ம வண்டிலே போஞ சீக்கிரம் போகலாம். அங்கே நிறைய நேரம் தங்கலாம். பஸ் போகாத இடத்துக்குக் கூட நான் வண்டியை ஓட்றேன். பஸ்ஸிலே போஞல் நீங்க சுமார் 2 மைல் நடக்கணம் நல்ல வெய்யிலிலே. நம்ம வண்டிலே வாங்கோ"

என்று மூச்சுவிடாமல்—அதுவும் தமிழில்—சொன்னார். வண்டியைப் பார்த்தோம். மிகவும் திருப்திகரமாக இருந்தது. மூன்று ரூபாய் அதிகமாக செலவழிப்பதா என்ற ப்ரச்னை எழுந்தது. அதில் ஆச்சரியமென்ன இருக்கின்றது? பெரிய தொகைகள் செலவிடுகையில் சரியாக கணக்குப் பார்க்காதிருப்பதும், சிறிய தொகை அல்லது சில்லறை செலவிடுவதில் தான் சிக்கனம் பார்ப்பது என்பது உலக வழக்கமல்லவா? அந்த சம்பிரதாயத்திற்கு விரோதமாக நாங்கள் நடப்போமா? பேரம் பேசலானோம். 17 ரூபாய்க்கு முடிவு செய்தோம். உடனே புறப்பட்டோம்.

* * *

கொஞ்ச தூரம் செல்கையிலேயே ரோடின் நிலைமையில் வித்தியாஸம் தென்பட்டது. நகர எல்லைவரை மிருதுவாக வந்து கொண்டிருந்த வண்டி அதற்குப்பிறகு குதிக்கவும் ஆட்டம் கொடுக்கவும் ஆரம்பித்தது. சமீபத்தில் தெரிந்த குடிசைகளின் கூட்டத்தைப் பார்த்து ஸ்ரீ. கம்பீரம் "பார்த்தீரா பரிதாபத்தை! அவ்வளவு அழகான தலைநகரத்திற்கு அடுத்துள்ள கிராமத்தில் நல்ல கல் கட்டிடமே காணவில்லையே. இங்கிருந்து இன்னும் ஏழ்மை அகலவில்லைபோலிருக்கிறது" என்றார். "அதுதான் பட்டணத்திற்கும் கிராமத்திற்கும் உள்ள வித்தியாஸம். லக்ஷ்மி தேவி அங்கு தாண்டவமாடுகிறாள்; இங்கு அவளைக் காணாமல் தவிக்கிறார்கள்" என்றார் ஸ்ரீ பாதாழ்வார். "இதிலென்ன ஆச்சரியம்? எங்கு பார்த்தாலும் இப்படியேதான் இருக்கிறது. நகரத்தில்தான் அபிவிருத்தியும், பல கிராமங்களில் சீர்கேடும் ஏற்பட்டுவருகிறது. அது தான் காலத்தின் கோலம்" என்றார் ஸ்ரீ பூஷணம். "இப்போது இருக்கும் நிலைமை எப்படி இருக்கின்றதென்றால் அழகுக்கு அழகு செய்வதும், மற்றதை 'யதாஸ்தானம் ப்ரதிஷ்டாபயாமி' என்று விட்டுவிடுவதும் என்பதுபோலத்தான். நமது நாட்டின் வருங்காலம் கிராம முன்னேற்றத்தில்தான் இருக்கிறது" என்றேன். இவ்வாறாக பேசிக்கொண்டிருக்கையில் பல கிராமங்களைத் தாண்டி வெகு தூரம் கடந்துவிட்டதை கவனிக்கவேயில்லை.

* * *

ஏத்தம் இறைத்துக்கொண்டு மூவர் பாடிக்கொண்டிருந்த காட்சி கண்களுக்கும், காதுக்கும் மனதிற்கும் ஒரு தனி ஆனந்தத்தைக் கொடுத்தது. "நமது சங்கீதத்தைச் சிறிது கிளப்பிவிட்டால் என்ன?" என்றார் ஸ்ரீமதி மைதிலி பாதாழ்வார். அந்த யோசனையை அவருடைய சகோதரி ஆமோதித்தார். "நமது சங்கீத சப்தத்தை வெளிப்படுத்தினால் ட்ரைவர் பயந்து போய் விடுவார். நமக்கெல்லோருக்கும் ஆபத்துதான்" என்று எச்சரித்தேன். "என்ன ஸார்! அப்படி சொல்றீங்கோ. பாட்டுன்னா யாருக்குத் தான் பிடிக்காது? எல்லாரும் உத்ஸாகமா பாடுங்கோ ஸார்" என்றார் மிஸ்டர் ட்ரைவர். "எனக்கு 'ஆயிரத்திற்கு அடியும், நூற்றுக்கு நுனியும்' தெரியும். ஒரு பாட்டாவது முழுமையும் தெரியாது" என்றார் மிஸ் சிங்காரம். அதே பல்லவியை இன்னும் மூவர் படித்தனர். இருவர் வாயைத்திறக்காது யார் முதலில் ஆரம்பிப்பார்களென எதிர்பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தார்கள். 'நீ முதலில், நான் பிறகு' என்ற பேரம் சிறிது நேரம் நடந்தபிறகு "அப் கிஸ்லியே கல்கி பாத்" என்று ஒருவர் ஆரம்பித்து ஒன்றரையடி பாடிவிட்டு நிறுத்திவிட்டார். உடனே "பீயாமிலனகோ ஜானு" என்று மற்றொருவர் ஆரம்பித்தார். சலிப்பேற்படும்வரை இவ்வாறாக பல பாட்டுகளை அரைகுறையாக நாங்கள்

நால்வர் காட்டுக்கத்தல் போட்டோம். ட்ராமா கொட்டகையில் கேட்பதுபோல "இனிமேல் தமிழ் பாட்டும் ராக ஆலாபனையும் வேண்டும்" என்றார் ஸ்ரீ ஆழ்வார். வண்டி செல்லும்போது ஏற்படும் சப்தத்தை ச்ருதியாக அமைத்துக்கொண்டு அதற்குச் சரியாக சாரீரத்தைஇசைத்துக்கொண்டு "மண்ணுய்ப் பிறந்தாலும் மாதவனின் அடியார்கள் மிதித்திடும் மாண்பெய்துமே' என்று ஆரம்பித்தேன். உத்ஸாக மூட்டும் முறையில் 'பேஷ்! சபாஷ்!' என்றெல்லாம் கோஷித்தனர். இவ்வாறாக குதூகலத்துடன் ஆளுக்கொரு பாட்டாக பாடிக்கொண்டே சென்றோம். ராக ஆலாபனை அவரவர் கற்பனை சக்திக்குத் தக்கவாறு அமைந்தது. ஹிம்மேந்திர மத்தியமம், ஆபோகி, ஸஹானா, நாட்டைக்குறிஞ்சி, சுராட்டி முதலியவைமிகவும் கச்சிதமாய் அமைந்தனவென்பது ஏகமனதான அபிப்பிராயம். சங்கீதம் துணையாக வரும்போது பிரயாணத்தில் அலுப்பு ஏது? நேரம் செல்வதே தெரியவில்லை.

* * *

இவ்வாறாக மிக உத்ஸாகத்துடன் சந்தோஷமாகப்பொழுதைக்கடத்தி சுமார் 12 மணிக்கு சிவசமுத்திரம் சென்றோம். அங்கு சுமார் மூன்று மணிநேரம்தான் தங்கினோம். ஆனால் அந்த மூன்று மணிநேர அனுபவங்களை என்றும் மறக்கவே முடியாது. ஆனந்தம், பயங்கரம், நிம்மதி, பீதி, ஆச்சரியம் முதலிய உணர்ச்சிகள் அந்த சிறிய நேரத்திற்குள் ஒன்றன்பின் ஒன்றாகத் தோன்றின.

* * *

முதலில் நீர் வீழ்ச்சியைப் பார்த்துவிட்டுப் பிறகு மின்சார உற்பத்தி நிலையத்தைப் பார்ப்பதெனத் தீர்மானித்து, நீர் வீழ்ச்சியுள்ள இடத்திற்குச் சென்றோம். அதைப் பார்ப்பதற்கென ஒரு மண்டபம் ரோட்டுக்கு அருகாமையில் கட்டப்பட்டிருக்கிறது. சாதாரணமாக எல்லோரும் அங்கிருந்து பார்த்துவிட்டுத் திரும்பிவிடுவது வழக்கம். ஆனால் நாங்கள் மலைச்சாரலில் கீழே இறங்கி ஜலம் விழும் இடத்திற்கு சமீபத்தில் சென்று பார்க்கப்பிரியப்பட்டோம். மண்டபம் உள்ள மலைக்கு எதிரேயுள்ள மலையிலிருந்து ஜலம் "ஜோ" வென்று விழுந்து இரண்டு மலைகளுக்கும் நடுவே யுள்ள விடத்தில் ஓடுகிறது. மண்டபத்திலிருந்து வெகு ஜாக்கிரதையாகக் கீழே இறங்கினோம். பலவிடங்களில் காலில் முள் குத்தியது. துணியிலும் சட்டையிலும் அடிக்கடி முள் செடிகள் மாட்டிக்கொண்டு உபத்திரவித்தன. நிதானமாகக் கீழே இறங்கி வருவதற்குள் பல தோற்றங்களைப் படம் பிடித்தேன். (இவ்விதழின் மேலட்டையின் உட்புறத்தில் 4 தோற்றங்கள் அச்சாகியுள்ளன.) எல்லோரும் ஒரு மூலைக்கு வந்து சேர்ந்தோம். அந்த விடத்தில் ஜலம் வேகமாகச் செல்லாமல் இருந்ததால் அதன் அருகில் சென்று ஜலத்தைக் கையிலெடுத்துப் பார்க்கலானோம்.

அவ்விடத்தில் நின்றுகொண்டு நாலாபுறமும் இயற்கையன்னையின் அழகை கண்குளிரப் பார்த்தோம். நாங்கள் இறங்கி வந்த மலைச்சரிவு பசேலென்று வெகு அழகாகவும், சாதாரண புல்லும் அழகிய செடிகளும் வளர்ந்துள்ளது போலவும் தோன்றியது. தூரத்து மலை பசப்பு என்ற சொல்லின் உண்மை நன்கு புலப்பட்டது. தூரவிருந்து பார்ப்பதற்கு அவ்வளவு அழகாகவும், ம்ருதுவாகவும் உள்ள அந்தச் சரிவிலுள்ள முள் செடிகள் செய்த உபத்திரவம் எங்களுக்கல்லவா தெரியும்! இந்த மலைச்சரிவிற்கு எதிர்ப்புறமுள்ள மலைச்சரிவில் நான்கு அருவிகள் கொட்டிக்கொண்டிருந்தன. உயரவிருந்து விழும் வேகத்தில் ஏற்படும்

சப்தமும், அதன் எதிரொலியும் கடு மழை பொழியும்போது ஏற்படும் சப்தத்தை யொத்திருந்தது. ஜலம் கீழே விழுமிடத்தில் கிளம்பும் நுரையும் தூவானமும் இரண்டாள்உயரம் எழும்பின. முழுதும் பால் பிரவாகம் போலத் தோன்றியது. இயற்கையின் வனப்பே அலாதி. இந்த அழகைக் கண்களால் பருகிக்கொண்டிருக்கையில் ஒரு பயங்கர சம்பவம் நேர்ந்தது. பகவான் செய்யும் சோதனைகளுள் அதுவும் ஒன்று.

திடீரென்று யாரும் எதிர்பாரா வண்ணம் மிஸர்ஸ் பரதாழ்வார் தண்ணியில் சறுக்கி விழுந்துவிட்டார்.

ஆபத்து நேரிடும்போது தானே ஆபத்பாந்தவனை வேண்டித் துதிப்பது உலக வழக்கமாகிவிட்டது! அதேமாதிரி எல்லோரும், க்ருபை செய்து காத்தருளும்படி எம்பெருமானை பிரார்த்தித்தோம்.

தெய்வாதீனமாக அவ்விடத்தில் ஆழமில்லை. உடனே அவரை அவருடைய தமையன் ஸ்ரீ கம்பீரமும், ஸ்ரீ ஆழ்வாரும் தூக்கி நிறுத்தினர்கள்; அவருடைய தங்கை முகத்தைத் துடைத்தார். காமெரா என் கையிலிருந்ததன் உபயோகம் அப்போதல்லவா தெரிந்தது! இந்த காட்சியை அப்படியே படம் பிடித்தேன். "யார் செய்த புண்ணியமோ! காப்பாற்றிவிட்டார்" என்று பகவானின் கருணையைப் புகழ்ந்தவாறு திரும்பலானோம்.

* * *

மின்சார நிலையத்தைப் பார்க்க உத்திரவுச் சீட்டு பெற்றுக்கொண்டு வந்த பரதாழ்வார் "நாமெல்லோரும் உயிருக்குத் துணிந்தவர்கள். நாம் ஆறு பேரும் உயிரை த்ருணமாக மதிக்கின்றோம் என்று எழுதிக் கொடுத்து வந்துவிட்டேன்" என்றார். இது இருவருக்குப் புரியவில்லை. "இப்போதுதான் ஒரு ஆபத்திலிருந்து தப்பித்தோம். இன்னமும் ஏதாவது பாக்கி இருக்கிறதா என்ன?" என்றார்கள் அவ்விருவர். சுமார் 300 அடி பள்ளத்திலுள்ள மின்சார நிலயத்திற்கு ட்ராலியில் சென்று திரும்புவதற்குள் ஒருவேளை ஆபத்து நேரக்கூடுமென்பதால், எல்லாவற்றிற்கும் துணிந்து இம் மாதிரி எழுதிக்கொடுத்தால்தான் அனுமதிக்கப்படுகிறார்கள் என்று விவரமாகத் தெரிவித்தார் ஸ்ரீ பரதாழ்வார்.

* * *

ட்ராலியுள்ள இடத்தைச் சென்று பார்த்து அனுமதிச்சீட்டைக் காட்டினோம். பெரியசரிவில் இரண்டுஜதை தண்டவாளங்களில் இந்த கோடியில் ஒரு ட்ராலியும், கீழ்க்கோடியில் ஒரு ட்ராலியும் நிற்பதைப் பார்த்தோம். ஒரே சமயத்தில் மேலே இருக்கும் ட்ராலி கீழே செல்வதும், கீழேயிருப்பது மேலே வருவதும் ஒருயந்திரத்தால் செய்யப்படுகின்றன. ஒரு ட்ராலியில் படிப்படியாக மூன்று வரிசைகள் உள்ளன. சுமார் 9 பேர்கள் உட்காரலாம். பக்கங்களில் கைப்பிடி கிடையாது. ஜாக்கிரதையாக உட்கார்ந்துகொள்ளவேண்டும். முதலில் குறிப்பிட்ட இருவருக்கு உள்ளூறப் பயம். எல்லோரும் உட்கார்தோம். ட்ராலியும் நகர்ந்தது. பயப்பட்டதுதான் மிச்சம். சாதாரணமாக ரயிலில் போவது போலவே இருந்தது.

கீழே சென்றபிறகு மேலே நிமிர்ந்து பார்த்ததும் 'இந்தச் சறிவிலா இவ்வளவு சுலபமாக வந்துவிட்டோம்' என்று ஆச்சரியப்பட்டோம். நிலயத்தையடைந்து மின்சாரத்தை உற்பத்தி செய்யும் யந்திரங்கள் காதை செவிடாக்கிவிடும்போல சப்தம் செய்துகொண்டே வேலை செய்வதைப் பார்த்தோம். உயரவிருந்து சறிவான பெரிய குழாய்களில் ஜலம் அதிவேகமாக ஓடிவந்து, இந்த யந்

திரங்களால் வேண்டிய அளவு உபயோகிக்கப்பட்டு, பிறகு ஜலம் வெளியில் வழிந்தோடும் காட்சியையும் கண்டோம். அங்கு ஜனிக்கப்படும் மின்சாரத்திற்கு எவ்வளவு சக்தி உண்டு என்பதை நிதர்சனமாகப் பார்த்தோம். இரும்பின்மேல் மின்சார சக்தி பட்டதும் அப்படியே தணல்போல இரும்பு சிவந்துவிட்டது! எல்லாவற்றையும் பார்த்துவிட்டுத் திரும்பினோம்.

* * *

அன்று மாலே மைசூரில் எங்கள் விடுதியில் உட்கார்ந்துகொண்டு மற்ற நண்பர்களிடம் அன்று ஏற்பட்ட எதிர்பாராத அனுபவத்தைக் கதைபோல சொல்லிச் சந்தோஷப்பட்டோம்.

"மோகினி" போட்டோ ஆல்பம்

புதிய வாசகர்களுக்கு ஒரு அறிவிப்பு

தயாநிதியின் ஆரம்பத்திலிருந்து நமது மோகினியைத் தருவிக்கும் புது நேயர்கள் பலர் நமது போட்டோ பகுதியைப்பற்றி கடிதங்கள் எழுதியிருக்கிறார்கள். ஏன் ஆர்ட் பேபரில் அச்சிடவில்லையென்றும், இதற்குமுன் எந்தவூர்களின் படங்கள் வெளியாகியுள்ளனவென்றும் கேட்டிருக்கிறார்கள்.

நமது மோகினி போட்டோ ஆல்பத்திலிருந்து ஒவ்வொரு இதழிலும் ஒரு பகுதி பிரசுரிக்கப்படுகிறது. இவ்வருடம் பிப்ரவரி முதல் மே உள்பட நான்கு இதழ்கள் ஆர்ட் பேபரில்தான் வெளியிட்டோம். மங்களகரமாக மஞ்சள் காகிதத்தில் வெளியிடுவதை ஏன் நிறுத்திவிட்டீர்களென பல நேயர்கள் கேட்கவாரம்பித்தனர். ஆகையால் ஜூன் முதல் எப்போதும் போலவே பிரசுரிக்கின்றோம்.

இதற்கு முன் இதழ்களில் கீழ்கண்ட க்ஷேத்திரங்களின் படங்கள் (ஸ்ரீவத்ஸன் எடுத்தவை) வெளியாயின. திருவல்லிக்கேணி (ஜனவரி) திருவையாறு (பிப்ரவரி); ராஜமன்னார்கோவில் (மார்ச்சு); திருமாலிருஞ்சோலை என்னும் மதுரை ஸ்ரீகள்ளழகர்கோவில் (ஏப்ரல்); திருவல்லிக்கேணி ரதோத்ஸவம் (மே). ஜூன் இதழில் தில்லை ஸ்தலமும், சென்ற இதழில் கன்யாக்குமரியும் நீங்கள் கண்டீர்கள். இவைகளுள் சென்ற இதழ் படங்கள்தான் சாதாரண காகிதத்தில் (வெகு அவசரத்தில்) அச்சிடப்பட்டன. மற்ற இதழ்களில் நல்ல காகிதத்தில் (மேல் அட்டையில்) அச்சிடப்பட்டன.

எல்லா இதழ்களும் முழுதும் செலவாகிவிட்டபடியால் தற்போது ஷை படங்களுடன் கூடிய பிரதிகள் (ஜனவரி முதல் ஜூலை உள்பட) கிடையாது. ஆகையால் ஷை படங்கள் வேண்டுவோர் விவரங்களுக்கு நமது காரியாலயத்திற்கு எழுதவும்.

—போட்டோ ஆசிரியர்.

சித்திர ரகளை

அம்பி:—என்ணா! அவால்லாம் என்ன பண்ரு?
அண்ணன்:—அவால்லாம் சித்தி(ரை)ர வதை செய்ரு. —"கார்த்திகை."

வனிதா மண்டலம்

மங்களம்:—அப்பாடா! கல்யாண கோர்டு சாத்தியாயிற்று. இனிமேல் பண்டிகை மாதங்கள் தொடங்கிவிட்டன. என்ன கல்யாணி! ஆடிப் பாலுக்கு மாப்பிள்ளை வந்தாரே, ஊருக்குப் போய்விட்டாரோ!

கல்:—இன்னும் இல்லை. 15 நாட்களுக்கு லீவு வாங்கிக்கொண்டு வந்திருக்கிறார். இன்னும் சில தினங்களிருப்பார். போகும்போது பெண்ணையும் கூட்டிக்கொண்டு போக வேண்டுமாம்.

பவானி:—தங்கம்போல அனுப்பிவிடேன். அதது சந்தோஷமாயிருக்கிறகாலத்தில் ஏன்பிரிந்திருக்கணும்.

கல்:—ஆமாம். செய்யவேண்டிய சாங்கியங்களைசெய்துதானே அனுப்பணம். திடீரென்று அனுப்புவது?

ஸுமதி:—அடே பைத்தியமே! பெண்ணைஉட்காரவைத்து கூத்தடிக்கப்போகிறாயா!... வெக்கக்கேடு... இன்னுமா அந்த ஆசை விடல்லே.

கல் :—என்னிஷ்டமா ஸுமதி! எங்க மாமியார், நாத்தனர் இருவரும் சும்மா இருக்கமாட்டேன் என்கிறார்கள். அவ்வளவு என்ன? சம்மந்தியம்மாளே கேட்கமாட்டாள் போலிருக்கிறது. நான் என்ன செய்வேன். எனக்கும் என் பர்த்தாவுக்கும் கூட இஷ்டமில்லை. பெண்ணுக்கு அடியோடு சம்மதமில்லை.

காவேரி :—நன்னா சொன்னாய் போ! நேற்று கல்யாணம், இன்று சோபன மடிப்பது. இதைப் பார்க்கும்போதே எனக்கு அவமானம் பிடுங்கித்திங்கறது. ஏன், அந்த காரியத்துக்கான சீர்வகைகளையும் அப்போதே சொல்லிக் கொடுத்துவிடுவததானே...பங்குனி மாதம் கல்யாணமானால் அம்மாதமே இதுவும். ஆனி முப்பதாந் தேதி கல்யாணம் ஆடி பிறந்ததும் சோபன மடிப்பது. என்ன வெட்கக்கேடு. முதல் முதல் ஆகும் சாஸ்திரமா சடங்கா, என்ன இருக்கிறது?...புருஷர்கள் எல்லாம் கேலி செய்துச் சிரிக்கிறார்கள். இந்த அழகிற்கு வீட்டோடாவது செய்கிறார்களா! பெரிய ஊர்கோலம் வேறு வைத்துவிடுகிறார்கள். 3, 4 வருஷம் ரகஸியத்தில் நடந்த இந்த காரியத்திற்கு இப்போ கொட்டு மேளம் என்ன வேண்டியிருக்கு?

மங்:—எனக்கென்ன தோன்றுகிறது தெரியுமா! எப்போது சட்டத்தின் கட்டுப்பாட்டினாலும், நவநாகரீகத்தினாலும் ஆதிகால முறை தவறிப் போய்விட்டதோ அதை அம்மட்டுடன் நிறுத்திவிடவேண்டும். கல்யாணப் பந்தலிலேயே சாந்திமுகூர்த்தத்திற்கான கட்டில் மெத்தை முதலிய சாமான்களைக் கூட சீருடன் வைத்துக் க்ரகப்ரவேசமாகியதும் பெண்ணை அவர்கள் வீட்டிலேயே விட்டுவிடவேண்டும். இனிமேல் இதுதான் நாகரீகம். சீருக்காகத்தானே பிள்ளைவீட்டுக்காரர்களில் சிலர் பறபறவென்று பறக்கிறார்கள்;சிலர் அடித்துப் பிடுங்குவதற்கொப்ப வெட்கத்தையும் விட்டுப்பேரம் பேசிக்கேட்கிறார்கள். பெண்வீட்டார் தம்தம் சக்திக்குத் தகுந்த சீர்வகைகளை ஒரேமட்டாய் கல்யாணப்பந்தலில்செய்துவிட்டால் பின்னால் வார்த்தைகள்கூடகுறையும் என்றுதான் தோன்றுகிறது.

இந்து:—மங்களம்! உன் வாயிக்கு வெறும் சக்கரை போட்டால் போதாது. திரட்டுப்பால்தான் போடவேண்டும். நானும் என் கணவரும்கூட இம்மாதிரி அடிக்கடி

பேசிக்கொள்வதுண்டு. எனக்கொரு பெண் கல்யாணத்திற்கிருந்தால்தான் செய்தே காட்டுவேன்.

பானு :— பெண்ணில்லாததால் தைரியமாகச் சொல்லுகிறாயோ ! உனக்குப் பெண்ணில்லாவிட்டால் என்ன. உறவினருக்குப்பிரசாரம் செய்யேன் பார்க்கலாம். கேட்பார்களா !

இந்து:—கேட்பவர்களுக்குக் சட்டாயம் சொல்லித்தான் வருகிறேன். இன்னொரு சட்டங்கூடவல்லவா போடப்போகிறேன்.

ஸாவித்திரி:—ஏதேது. பலமாய் இருக்கிறதே. நீ சட்டசபை அங்கத்தினர்களில் ஒருத்தியா என்ன ?... அது என்ன சட்டம் சொல்லிவிடு.

இந்து :—சட்டசபை அங்கத்தினர்கள் கொண்டுவரும் சட்டமெல்லாம் சட்டமாகிவிடுகிறதா ! அனுபவத்தில் வரும் சட்டத்தைத் தான் அசைக்கமுடியாது. யுவர் சங்கம், வாலிபர் சங்கம் என்றெல்லாம் வைத்துக்கொண்டு பிள்ளைகள் விளையாடுகிறார்களே ! அவர்கள் ஒரு கட்டுப்பாட்டுடன் தமக்குள் ஒரு சட்டம் செய்துகொள்ளவேண்டும். அதாவது, தாம் கல்யாணம் செய்துகொண்டவுடனே பெண்ணைகூடவே அழைத்துச் செல்வது......மத்தியிலுள்ள உபயோகமற்றக் கூத்தடிப்பு கூடாது' என்று முடிவு செய்துகொண்டு முதலிலேயே பெண்வீட்டாரிடம் சொல்லிவிட்டால் மாப்பிள்ளைக்கு மீறி செய்வார்களா...

மங்:—இந்து கூறுவது எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. எத்தனையோ பெரிய மனிதர்கள் வீட்டில் இப்போது இப்படித்தான் செய்கிறார்கள். எப்போது கல்யாணகால அளவுமாறிவிட்டதோ, அப்போதே சகலமும் சமயோசிதம்போல் செய்ய வேண்டும். இந்த விஷயத்தில்செலவு செய்யும் பணத்தைக்கொண்டு பெண்ணுக்கு ஒரு நகை செய்து போட்டாலும் உபயோகமுண்டு. அல்லது 'சீரு. சீரு' என்று அலையும் சம்மந்திகளுக்கு இன்னும் நாலுபாத்திரமோ சாமான்களோ வாங்கி வைத்தாலும் உதவியாயிருக்கும். இதை விட்டு 'ஊருக்காகச் செய்கிறேன்' என்று கூறிக்கொண்டு ஊரார் சிரிக்க என் செய்யவேண்டும்? இது சுத்த விகாரமான காரியந்தான்.

காவேரி :—வாஸ்தவம். முன் காலத்தில் 8 முதல், 10-வயதுக்குள் கல்யாணமாகும். பிறகு சில வருஷங்கள் கழித்து பெரியவளாவதும் சாஸ்திரப்படிச் செய்வதும்பொருத்தமிருந்தது. இப்போது சாஸ்திரமேது மண்ணாங்கட்டி ஏது? 5 நாளைய கல்யாணம் ஒரே நாளில் என்றுவந்தது. காலத்தின் நாகரீக வேகத்தில் ஒரே வேளையில் இப்போது தீர்ந்துவிடுகிறது. அதற்கேற்றாப்போல் புரோகிதர்களும் கல்யாணவீட்டில் சாப்பிடும் பலகாரங்கள், இட்டிலி, காப்பி இவைகள் போதாமல் மந்திரங்களை லபக் லபக்கென்று கபளீகரம் செய்துவிடுகிறார்கள். கன்னிமாலைதான் வெகு அழகாக சின்னஞ்சிறு பசங்களை தோள் தூக்கி மாற்றிக் கண்ணுறக் காண்பதாயிற்றே. அம்மாமி, மாமா...அக்கா அத்திம்பேர், தாதா பாட்டி, இப்படியாகக் கல்யாண ஜோடிகள் கன்னி ஊஞ்சலாகி உள்ளேவந்தால் உடனே ஐஸா பைஸா! வென்று புரோகிதர் தம் காரியத்தை முடித்து முகூர்த்தத்தை குறித்த நேரத்திற்கு அரைமணி முன்பே முடித்துவிடுகிறார். கல்யாணமென்னமோ தீர்ந்துவிட்டது.

பானு:—காவேரி ! நீ ஒவ்வொரு வாத்தியார்களையும் பரீக்ஷை பார்த்து வருகிறாய்போலிருக்கிறதே.....இந்த கல்யாண மந்திரங்களைக்கூட நாம் கற்றுக்கொண்டு பாடம் செய்திருந்தால் புரோகிதர்கள் ஏமாற்றி விட முடியாது பாரு. சமையல் வகைகள் பலகார வகைகள், முற்றும் நமக்குச் செய்யத் தெரிந்திருந்தால் சமையல்

காரன் நம்மை ஏய்க்கமுடியாதல்லவா? அதுபோலதானே இதுவும்?

ஸுமங் :—ஆமாம். கட்டாயம் தெரிந்துகொண்டால் நல்லதுதான். இந்த அழகான கல்யாணம் செய்யும் அவசரத்தில் அந்த புரோகிதர்கள். "கல்யாண சந்தடியில் தாலி கட்ட மறந்தாளும்" என்ற பழமொழிப்படி அத்தனை மோசமில்லாது தாலியைக் கட்டுகிறார்கள். ஆனல் சிலர் தலைகீழாக மங்கல்யத்தைக்கவிழ்த்துக்கட்டி விடுவதுதான் பெரிய வேடிக்கை.

மங்:—சென்ற மாதங்கூட ஒரு கல்யாணத்தில் வாத்தியார் அப்படிச் செய்தார். பிறகு சாவதானமாகப் பெண்ணின்கழுத்தில் பார்த்தபோது மங்கல்யம் குப்புறக் கிடந்து தபஸ் செய்துகொண்டிருந்தது. அதை நானே அவிழ்த்து 'லக்ஷ்மீ கல்யாணம் வைபோகமே...பகவானே! தீர்க்க ஸுமங்கலிபவா!' என்று ஆசீர்வதி" என்றுகூறிக்கொண்டேகட்டினேன்.

ஸாவித்:—பேஷ்...இதைக்கூடப் பார்க்க அவகாசமில்லையா! சமயத்திற்குத்தக்க வேஷம்போடும் சமய சஞ்சீவிகள்தான் சில புரோகிதர்கள். அவர்களென்ன செய்வார்கள். அதிகமாகப் படிப்பு மிஞ்சிவிட்டதன் விபரீதத்தில் அக்னி புகையில் பெண்ணும் பிள்ளையும் உட்கார்ந்திருக்க முடியவில்லை. விகரெட் புகையைப் போல் இந்த புகை ஜம்மென்று இருக்குமா! கண்ணைக் கசக்குவதும் மூக்கைச் சிந்துவதுமாகவரும்போது அந்த ஆத்திரம் முற்றும் புரோகிதன் மீது தாவிகுதிக்கிறது.'ஓய்! எத்தனை நேரங்காணும் இஸ்வாஹா...புஸ்வாஹா! என்று பிதற்றிக்கொண்டு கிடப்பது. ஆகட்டுங்காணும்' என்று அதட்டுகிறார்கள். தம்முடைய அருமைப்பெண்,அதிலும் படித்த அருமை மகள், புகையில் இருக்கச் சகியாத தகப்பனரே, புரோகிதரை விரட்டுகிறார். எல்லாம் சேர்ந்து புரோகிதர் 60...70 மைல் வேகத்து மோட்டாரைப்போல் அடித்துக்கொண்டுபோகிறார். இதற்குக் காரணம் வீட்டுக்காரர்களைக் கூடத்தான் சொல்லவேண்டும்.

இந்து:—எத்தனையோ இடங்களில் இம்மாதிரி நான் பார்த்திருக்கிறேன். பெண்களின் அருமை அந்த கொஞ்சநேரத்திற்குள்தான் விளம்பரமாகும்படிப் பெருகுகிறது போலும். மந்திரலோபம் ஏற்பட்டால் அதனல் கெடுதல் என்பதை மறந்தே விடுகிறார்கள். மாப்பிள்ளையின் முடுக்கும் அப்போதுதானே ப்ரமாதப்படுகிறது.

பானு:—ஆமாம். மாப்பிள்ளை ஐ. ஸி. எஸ்...அல்லது பெரிய படிப்பாளி.பணக்காரன்...அவன் கோபித்துக்கொண்டு போய்விட்டால் என்ன செய்வது? மந்திரம் போனல் போகிறது. மாப்பிள்ளை சந்தோஷமாக விருந்தால் போதும் என்றுநினைத்து மந்திரத்தை த்யாகம் செய்கிறார்கள் பாவம். (கொல்லென்று எல்லோரும் சிரித்தார்கள்.)

ஸுமங்:—முக்யமான மந்திரத்தை விடுவதற்கு ஒரு கஷ்டத்தையுங் காணவில்லை. பிறகு நான்குநாள்வீண் கூத்தடிப்பது நின்றுவிட்டால்தான் வந்துவிடுமோ! இதெல்லாம்வெறும் ஹம்பக்கு. இம்மாதிரி விஷயத்தில் பணத்தையும் நேரத்தையும் வீணுக்காது அதை நல்ல வேறு காரியத்தில் உபயோகப்படுத்தலாம். நாகரிகம் என்று முக்யமானவற்றை விடவும் வேண்டாம். அனுவச்யத்திற்கு ஆடவும் வேண்டாம்.

கல்:—எனக்கு என்ன பேசுவதென்றே தெரியவில்லை. யார் எது வேண்டுமாயினும் சொல்லட்டும். மாப்பிள்ளையுடன் பெண்ணை இஷ்டப்படி அனுப்பிவிடுகிறேன்.

மங்:—பேஷ் ... கெட்டிக்காரத்தனமாக நட: அப்படி பெண்ணை இப்போது அனுப்பாவிட்டாலும்

இந்த கூத்தடிக்காதே. நாங்கள் கட்டோடு வரமாட்டோம்.

இந்:—சபாஷ்! சபாஷ். அப்படி சொல்லு ராசாத்தி! இதுதான் அழகாயிருக்கிறது. மாப்பிள்ளைக்கு ஸ்பெஷல் விருந்து என்று ஒருநாள் ஏற்பாடு செய்து எங்களை எல்லாம் கூப்பிடு. உன்சமையலறையைக்காலி செய்துவிட்டுச் சம்பிரமமாய் வருகிறோம். சந்தோஷந்தானே...இப்போதே நாக்கில் ஜலம் ஊறுகிறது.

வை. மு. கோ.

விகட வெடிகள்

"விருச்சிகம்"

தகப்பன்:—எண்டா முண்டம்! உன்னிடம் முட்டிக்கொள்வதைவிட சுவரில் முட்டிக்கொள்ளலாம். இந்த கணக்கு உன் மூளையில் ஏறல்லே?

பையன்:—எம்பா !...'ஒங்கப்பாவிடம் முட்டிக்கறத்தே சொவுருலே முட்டிக்கலாம்''னு அம்மாகூட அடிக்கடி சொல்றாளே, அம்மாகிட்டே நீ கூட கணக்கு சொல்லிக்கிறயாப்பா?...

* * * * *

ஒருவர் க்ஷவரம் செய்துகொண்டிருந்தார். வெகுநேரமாகியும் நாவிதன் தலையை விடாததால், "என்னடா இது. அரைமணி நேரமாயிற்று; தலையை விடவில்லையே. வேலை முடிந்தும் தலையை ஏன் தடவுகிறாய்?" என்றார்.

அதற்கு நாவிதன் சாவதானமாகப் பேசத்தொடங்கி, "இல்லீங்க. கடவுள் ஒங்க மண்டேலெ ஏதோ எழுதி மயிராலே மறச்சிருக்கான்னு செத்தெமுன்னே சொன்னீங்களே! மயிரெல்லாம் எடுத்துட்டேனே, எழுத்து தெரியறதான்னு பாத்தேன்" என்றான்.

* * * * *

ஊரிலிருந்து புதிதாகவந்த அம்மாள் அந்த வீட்டு மருமகள் கர்ப்பவதியாயிருப்பதையறிந்து பக்ஷணங்கள் கொண்டுவந்தாள். மருமகளை முன்பு பார்த்ததில்லையாகையால் வயிறும் வாயுமாய் நின்றிருந்த பெண்தான் என்று நினைத்து தட்டுடன் வெத்திலை பாக்கு பழம் பக்ஷணம் முதலியவற்றைக் கொடுத்து, "நல்ல பிள்ளையாய் பெற்றுக்கொள்ளும்மா!" என்றாள். அந்த பெண்ணுக்குத் தூக்கிவாரிப்போட்டது. மற்றவர்கள் விழுந்துவிழுந்து சிரித்துவிட்டு, "பாட்டீ! இவ மருமகள் இல்லே! மருமகளுக்குத் தங்கை. இவளுக்குக் கல்யாணத்திற்கு வரன் தேடுவதற்காக இவளை இங்கு அழைத்திருக்கிறோம்" என்றார்கள்.

* * * * *

தகப்ப:—டேய் அம்பீ! இன்னிக்கு பெரட்டாசி சனிக்கிழமை ரொம்ப கும்பாயிருக்கு. நீ தனியா வெளியே போகக்கூடாது தெரியுமா!

பைய:—(சடக்கென்று தகப்பனுர் தோள்மீது ஏறிக்கொண்டு) அப்படின்னு நீயே அந்த மிட்டாய்க்கடைக்கு தூக்கிண்டுபோய் விட்டுடுப்பா,

OFFICE OF THE REGISTRAR OF ...
14 OCT 1941
MADRAS

15

ஹரிஹரன், கச்சேரி அறையில் யாருடனே ஏதேதோ ரகஸிய மாகப் பேசிக்கொண்டிருந்தான். கதவின் பின்புறமிருந்த நித்யாவுக்கு இந்த வார்த்தை காதில் விழவிழ இன்னும் மனங் கலங் கியது. 'இன்னும் என்னதான் நடக்கிறது பார்க்கலாம்' என்று பேசாது நின்ருள்.

ஹரி:—அதெல்லாம் முடியாது சார்! சரியாக மூன்று இலக்க முள்ள தொகையை வைத்தால்தான் மேலே பேசமுடியும். சும்மா கையை விரித்தால் காரியம் ஆகுமா!

வந்தவன்:—சார்! முன்பு காரியம் முடிந்தபோது நான் பெருந்தொகையை உங்களுக்குத் தரவில்லையா! ஒரு வண்டிநெல்லும் ஆறு மூட்டை துவரையும் 10 மணங்கு புளியும், ரெண்டு மூட்டை எள்ளும், நாலு மூட்டை கடலையும், ஒரு மூட்டை மஞ்சளும் அனுப்பவில்லையா! கொடுக்காத மனிதர்களைப்போல் என்னையும் எண்ணிப் பேசலாமா!

ஹரி:—சரிதான் சார்! நேற்று சாப்பிட்டால் இன்று என்ன ஆயிற்று? அந்த விஷயம் அதோடு போயிற்று. இந்த விஷயம் வேறு. இதற்கும் அதற்கும் என்ன சம்மந்தம்?—என்று சொல்வதைக் கேட்ட நித்யாவுக்குக் கோபமும் வெறுப்பும் பிச்சிக்கொண்டு வந் தன. சற்றும் அஞ்சாமலும் பயப்படாமலும் உள்ளே சென்ருள்.

அன்னிய மனுஷ்யன் உட்கார்ந்திருக்கையில் இவள் வருவதைப் பார்த்ததும் ஹரிஹரனுக்குக் கோபம் வந்ததால் நித்யாவை விழுங்கி விடுபவன்போல் பார்த்தான். நித்யாவிடம் எல்லாவிதமான உணர்ச் சிகளுக்கும் நகைப்பு ஒன்றுதான் ஆயுதமாகக் கொண்டிருக்கிரு ளாதலால் ஒருவிதமான பார்வையுடன் கடகடவென்று நகைத்தாள். "ஏன் இப்படி பார்க்கிறீர்கள்? என்னிடம்கூட மூன்று இலக்கம், நான்கு இலக்கம் முதலியவற்றில் ஏதாவது எதிர்பார்க்கிறீர்களா! நான்கூட ஒரு காரியமாகத்தான் வந்திருக்கிறேன். இதோ இந்த குடியானவனின் வயிற்றில் அடிக்காமல் இவன் வயிற்றுக்கு ஒரு வாய் கஞ்சிவார்க்கும்படி சிபார்சு செய்வதாக வந்தேன். ஒவ்வொரு மனிதருடைய வாழ்க்கையிலும் "ஏதாவதொரு துரும்புக்குச் சம மானதாவது நல்ல காரியம் செய்தேன். உபகாரம் செய்தேன். புண் ணியம் செய்தேன்" என்று நினைக்கக்கூடிய அம்சம் இருக்கவேண் டாமா! இதுஇல்லையெனின் மனிதப்பிறவியாகுமா! இது ஒருநல்லதா வது செய்து சந்தோஷப்படுங்கள்" என்று விடுவிடென்று கூறினுள்.

ஹரிஹரனுடைய கண்களுக்கு அப்போது நித்யா ஒரு காளிகா தேவதையைப்போல் தோன்றினுளேயன்றி தன் மனைவியாகத் தோன்றவே இல்லை. பல்லைக் கரகரவென்று கடிக்கின்ருன். இன் னெரு மனிதனின் முன்பு தன்னை மானபங்கம் செய்வதை அவனுல்

சகிக்கவே முடியவில்லை. எதிரிலுள்ள மனிதன் என்ன நினைக்கிருனே என்று அந்த பக்கம் திரும்பிப் பார்த்தான்.

அறைக்குள் பெண்பிள்ளை வருவதையறிந்த அம்மனிதன் மரியாதையாக வெளியில் போய்விட்டான். ஆசனம் காலியாயிருந்ததைப் பார்த்தபிறகுதான் ஹரிஹரனுக்கு சற்று மூச்சு சரியாக வந்தது. ஆனல் பெரிய முண்டாசும் மீசையுமாக ஆறடி உயரத்திற்குப் பனைமரம்போல் நிற்கும் குடியானவனைப் பார்த்ததும் மறுபடியும் தூக்கிவாரிப்போட்டது. அவமானமும் அசட்டுத்தனமும் குடிகொண்டு முகத்தில் தாண்டவமாடியது.

அந்த வேகத்தில் தலைகால் தெரியாமல் ஆத்திரம் பொங்கி எழுந்தது. கண்மூடித்தனமாய் நித்யாவின் கையைத் தரதரவென்று பிடித்து இழுத்துக்கொண்டு அடுத்த ரூமுக்குப்போய் கன்னத்திலும் முதுகிலும் பளார் பளார் என்று பத்தறை வைத்து உதைத்துத் தள்ளிவிட்டு ஆவேசத்துடன் வெளியே வந்தான். இதைக் கண்ட குடியானவனின் குடல் நடுங்கியது. தேகம் பதறியது.

சுதா 'அம்மா!' என்று அலறியபடியே ஓட்டமாக வந்து நித்யாவைக் கட்டிக்கொண்டு அழுது துடிக்கிருள். நித்யாவோ வாய் திறக்கவே இல்லை. பெரியதாக கலகலவென்று சோகம் நிறைந்த சிரிப்புச் சிரித்தாள். ஆனல் கண்ணில் மட்டும் ஜலம் கொட்டிக் கொண்டேயிருந்தது. தன் தாயாரை இதுபோல் எத்தனையோ தரம் தன் தகப்பனர் அடித்திருந்தும் இன்று நித்யாவை அவர் அடித்தபோது சகிக்கவேமுடியாத துக்கம் சுதாவுக்குப் பொங்கி எழுந்தது.

நித்யாவின் கன்னங்கள் செக்கச் செவேலென்று சிவந்து விரல்விரலாக எழும்பி வீங்கிப்போயிருப்பதைப் பார்த்ததும் அவள் மிகவும் சிறுமியாயிருப்பினும் தாங்கமுடியாத மனத் துடிப்புடன் ஓட்டமாக ஓடி தன் அண்ணனிடம் சென்று "அண்ணு! அண்ணு! சற்று ஓடிவாயேன். அப்பா தலைகால் தெரியாது அம்மாவை அடித்து கன்னம் அப்படியே வீங்கிப்போய்விட்டது. ஏதாவது மருந்து தடவேன்" என்று அவன் கைகளைப் பிடித்துக்கொண்டு கெஞ்சினள்.

முரட்டுச் சுபாவமுடைய யாதவ், "பேஷ்! பலே பேஷ்! பூசைக் காப்பு கிடைத்ததா! அதற்காக நீ அழுதுவழிந்தவாறு ஓடிவந்தாயோ! போடீ கழுதை!" என்று அலக்ஷியமாகக் கூறினன்.

சிறுமி அதைக் கண்டு சிறிது கோபமடைந்து 'என்ன அண்ணு! புத்தியில்லாமல் சிரிக்கிருய்? உனக்கு மனத்தில் தயை இல்லை? அம்மாவை இப்படி அடிப்பது தப்பிதம் என்று தோன்றவில்லை? சிரிக்கிருயே" என்று கடுகடுத்துக் கூறினள்.

யாதவ் பின்னும் கோபத்தை யடைந்து "மோரக்கட்டையைப் பாரு. என்னைப் பார்த்து புத்தியில்லை என்றும் தயை இல்லை என்றும் கேட்க அத்தனை தைரியமா உனக்குப் பிறந்துவிட்டது. அதிகப்ரஸங்கி! எனக்கு தயை இல்லைதான். நீதான் பெரிய நாத்துக்கிழவி;

தயாநிதியாயிருக்கிருயே! அது போதும். சீச்சீ...நாயே! ஓடு வெளியே" என்றுகூறியபடியே பளபளவென்று அடித்துவிட்டான்.

இதைப் பார்த்துக்கொண்டுவந்த தாமோதரன் மனது சகிக்காமல் ஓடிவந்து யாதவனைத் தடுத்து "யாதவ்!...இதென்ன முரட்டுத்தனம். சின்ன குழந்தையை இப்படி தலைகால் தெரியாமல் அடிக்கிருயே! ஏசகுபிசகாக எங்கேனும் பட்டுவிட்டால் என்ன செய்வது?" என்று சொல்லியவாறு சுதாவின் கையைப் பிடித்து இழுத்து விலக்கிவிட்டான்.

யாதவ் சோதாத்தனமாகப் பார்த்தபடியே "என்னடா! குருட்டுப்பயலின் திருட்டுப்பயலே! வயித்துச் சோத்திற்குக் காய்ந்து கிடக்கும் நாயிக்கு எச்சில் இலை அகப்பட்டால் தின்றுவிட்டுப் பேசாமலிருக்கமுடியவில்லையா! அதிகப்ரஸங்கித்தனமாக என் விஷயத்திலும் என் தங்கை விஷயத்திலும் உன்னை யாரடா தலையிடச்சொன்னது? விதியத்தப்பன்னுடை! இனிமேல் என் ஜோலிக்குவந்தால் இதோ இதுதான் கிடைக்கும்" என்று அத்தனைபெரிய தாமோதரனை பளாரென்று கன்னத்தில் அறைந்துவிட்டு ஒரே விசையாக ஓடினன்.

இத்தனை ரகளைகளையும் சகித்துக்கொண்டு நித்யா இந்த கூச்சலைக்கேட்டு ஓட்டமாக ஓடிவந்து யாதவனை வழி தடுத்து 'யாதவ்! நில்லு. நீ என்னவிருந்தாலும் என் குழந்தை; நான் உன்தாய் என்பது ஞாபகமிருக்கட்டும். வயிற்றுச் சோற்றிற்கு வழியற்று உன் தயாளசத்திரத்தில் வயிறு வளர்ப்பதற்காகவே தாமு வந்திருப்பதை நான் இல்லை என்று சொல்லவில்லை. அதற்காக நீ கேவலம் மனித சுபாவத்தையும் மறந்து இம்மாதிரி செய்வது சற்றும் நன்றாயில்லை. வீதியில் போகும் பிச்சைக்காரனைவிடவா அவன் உனக்கு இளைத்துவிட்டான் எந்த நேரம் பார்த்தாலும் 'குருடு, குருடு' என்று பழிப்பது கடவுளுக்குப் பொறுக்கவே பொறுக்காது.

யாதவ்! ஒருகாலத்தில் எங்கப்பாவும் உன்னைப்போல் நன்றாகக் கண் தெரிந்து வாழ்ந்தவர்தான். விதியின் வலிமையின் கொடுமையால் அவருடையகதி இன்று நீ ஏசிப் பேசும்படியாக ஆகிவிட்டது. அந்தகரின் வயிறும், மனமும் கலங்கினல் அது க்ஷேமத்திற்குக் குறைவு என்பதை மறக்காதே. உலகத்தில், மனிதர்கள் கண்டதே காக்ஷி. கொண்டதே கோலம் என்று யாரும் திமிர்படைத்து நினைக்க வேண்டாம். எல்லோரும் கடவுளின்கீழ்தான் குடியிருக்கிறோம். நீ இப்போதுதான் முளைக்கும் இளந்தளிர். இன்னும் எத்தனையோ உலகானுபவங்களை அறிந்து ஆயிரம் காலம் வாழவேண்டும். வீணகத் துள்ளாதே" என்று ஹிதமாகவே புத்தி சொன்னள்.

செவிடன் காதில் ஊதிய சங்குபோல் எல்லாம் வீணயிற்றேயன்றி ஒன்றும் உபயோகப்படவே இல்லை. நித்யாவின் நிர்மலமான அன்புடன்கூடிய ஆசீர்வாதத்தையும், புத்திமதியையும் அறியும் சக்தி அந்தமடயனுக்கு ஏது? உதட்டைக் கடித்தவாறே, "அடேயப்பா!

அப்பாசரியானபடி கன்னம் புடைக்கச்சாத்துமுறை செய்திருந்தும் கொழுப்புமட்டும் அடங்கவில்லையே! இன்னும் கொஞ்சம் போட்டிருந்தால்சரியாகிவிடும்" என்று முணுமுணுத்துக்கொண்டே ஓடினான்.

தாமோதரன் கண்ணில் ஜலம்விட்டபடியே, "அக்கா! நானும் எத்தனையோதரம் பொறுத்துப் பொறுத்துப் பார்த்தேன். என்னால் முடியவே இல்லை. என்னதான் நாங்கள் கதி கெட்டிருந்தாலும் இம்மாதிரி அவமானப் படவும் சுருக்குசுருக்கென்றுவார்த்தைகள் கேட்கவும் முடியவே இல்லை. எங்களுக்காக நீபடும்சங்கடம்தாங்க முடியாத வேதனையை உண்டாக்குகிறது எங்களை இனி நீ கத்தரித்து விட்டுவிடு. வீண் கஷ்டம் உனக்கு வேண்டாம்" என்று புலம்பியபடியே கூறினாள்.

நித்யாவின்மனமும் பதறியது. சுதா சிறுமியாக விருப்பினும் மிகவும் இளகிய இதயத்தையுடையவளாதலால் அவள் நித்யாவின் இடுப்பைச்சுற்றி அணைத்துக் கொண்டு, 'மாமா! அந்த மொட்டைப் பையனின் வார்த்தையை நீங்கள் மதிக்கவே வேண்டாம். அவன் வெறும் சோதா. இந்த வீட்டிற்கு எங்கம்மாவும் அப்பாவும் அதிகாரிகளேயன்றி அவனல்ல. அவன்சம்பாத்யத்தில் நீங்கள்வயிறுவளர்க்க வரவில்லை. ஆகையால் நீங்கள் போகவே கூடாது. அவன் கிடக்கிறான் முட்டாள்" என்று

கண்ணில் நீர் முட்டக் கூறினாள்.

தாமோதரன்:—சுதா! உனக்கு ஒன்றும் தெரியாது. நீ சின்னக் குழந்தை. வீட்டில் மட்டுமின்றி வெளியிலும் அவன் என்னைச் செய்யும் அவமானம் கொஞ்சநஞ்சமில்லை. எவ்வளவுக்குத்தான் என் மனது பொறுக்கும்? நீ அழாதே சுதா! நாங்கள் பண்ண பாவத்தின்படி அனுபவித்துத் தானே தீர்க்கவேண்டும்...... அக்கா! எங்களைக் கட்டுப் படுத்தாதே. அப்பாவை குருடு குருடு என்று சொல்லும்போது என்மனம் கொதிக்கின்றதே அப்பாவின் மனது எப்படித்தான் துடிக்காது? அவர் வெளியில் காட்டிக்கொள்ளாது உள்ளுக்குள்ளேயே தவிக்கின்றார். வீணாக வார்த்தை கேட்பானேன். எங்களை அனுப்பிவிடு அக்கா!.........என்று கூறும்போது தாமோதரனின் தொண்டையை துக்கம் அடைத்துக்கொண்டது.

நித்யா தாமோதரனை முதுகில் தடவிக் கொடுத்து அவன் கண்களைத் துடைத்தவாறு 'தாமூ! இதோ பாரு! அழாதேப்பா! காலவித்தியாஸம் என்பதை யாராலாவது மாற்றமுடியுமா அதையனுபவித்துத் தான் ஆகவேண்டும் என்று சற்றுமுன் நீதானே

சொன்னுய். சுதா சொல்லியதுபோல் அவன் ரெண்டாங்கெட்டான் பையன். புத்தி யில்லாதவன். அவன் வார்த்தைக்கு நீ ஏன் காது கொடுக்கவேண்டும்? உன்னை என் எஜமானரோ, என் மாமியாரோ ஏதாவது துச்சமாகச் சொன்னல் அப்போது நீங்கள் அடுத்த நிமிடமேபோய்விடலாம். பொறுமையை இழக்காதே! பொறுத்தார் பூமியாள்வார் என்ற பழமொழியை நீ மறக்கலாமா! இந்த அனுபவங்களெல்லாம் உனக்குப் பிற்காலத்தில் நல்ல படிப்பினையாகும். மனத்தைத் தளரவிடாதே. தாயற்ற குழந்தை சுதாவின் வார்த்தையை தட்டாதே. அவளுக்கு நீ வழக்கம்போல் பாடத்தைச் சொல்லிக் கொடு. நீயும் படித்து வா...போப்பா! தாமூ!...உம். அழாதே! இவைகளை வெளியில் சொல்லாதே. நமக்குத்தான் அவமானம். போ! படிக்கப் போ!' என்று ஹிதமாயும் அன்பொழுகவும் கூறினுள்.

இதற்குமேல் தாமோதரனுல் எதிர்த்துப் பதில் சொல்ல முடியவில்லை. மௌனமாக நின்ருன். சுதாவுக்கு வெகு சந்தோஷமாகி விட்டது. "மாமா! ஓடியா மாமா! நாம் படிக்கப்போகலாம்" என்று சந்தோஷத்துடன் கூறிக்கொண்டே அவன் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு ஒரே ஓட்டமாக ஓடிப்போனுள். சிறுமியின் இதயம் சந்தோஷத்தால் பூரித்தது.

16

"போட்டோவில் பார்த்தால் பையன் நிரம்பவும் அழகாகத் தானிருக்கிருன். நேரில் பார்த்தால்தான் தெரியும்; ஆகையால் புறப்படத்தயாராயிரு" என்று நாற்பது வயதுடைய நடுத்தர மனிதர் தன் மனைவியை நோக்கிக் கூறினுர்.

அன்று இரவு வண்டிக்கே தம்பதிகள் சகிதம் ரயிலேறினுர்கள். பெண்ணின் பெற்ருேர்கள் நேரில் வரப்போகும் செய்தி தந்தி மூலம் ஹரிஹரனுக்கு எட்டியதும் தூக்கிவாரிப்போட்டது. 'நம் மகனுடைய அதிகப்ரஸங்கித்தனத்தை அவர்கள் நேரில் அறிந்துவிட்டால் தண்டாபேரமாக முடிந்துவிடுமே! போட்டோவுடன் அவர்கள் திருப்தியடைந்துவிடுவார்கள் என்று பார்த்தேனே! இப்படி ஒரு தந்தி வந்திருக்கிறதே' என்று தனக்குள் முணுமுணுத்தவாறு 'அம்மா!' என்று கூப்பிட்டான்.

அப்போதுதான் குப்பம்மாள் நித்யாவின் முக வீக்கத்தையும், சுதாவை யாதவ் அடித்ததையும் பார்த்து ஒன்றும் சொல்லமுடியாமல் தர்மசங்கடத்தில் உழன்றுகொண்டிருந்தாள். மகன் கூப்பிட்டவுடனே எழுந்து ஓடிவந்தாள்.

ஹரி:—அம்மா! பிள்ளையாண்டானை நேரில் பார்க்கவேண்டுமாம். விடியற்காலை வண்டியில் அவர்கள் வருகிறார்களாம். தந்தி வந்திருக்கிறது. அந்த மூர்க்கனை வீட்டிலேயே படுக்கச்சொல்லு.

குப்ப:—ஐயையோ!...

ஹரி:—என்ன ஐயையோ வேண்டியிருக்கு. கல்யாணப் பேச்சு பேசும்போது ஐயையோ என்று அடித்துக்கொள்கிறாயே!

குப்ப:—ஐயோ ராமா!...நான் அபசகுனமாகச் சொல்லவில்லையடா! அந்த எழவெடுத்த பிள்ளை இப்போதுதான் வீட்டில் சுதாவை அடித்து ஹதம் செய்துவிட்டு எங்கேயோ ஓடிவிட்டதே! அதை எங்கே தேடுவது என்று சொன்னேனப்பா! அவன் ராத்திரி வந்தால் சரிதான். வரவில்லை என்றால் ?

ஹரி:—(கோபத்துடன்) வரவில்லை என்றால் சுவற்றில் முட்டிக்கொள்வது. பெண்ணைப் பெத்த ஜம்பக்காரன் நேரில்பார்க்கவேண்டுமாமே! படத்தைப் பார்த்தால் போதாதோ?...எல்லாம் பெரிய நியூஸன்ஸாயிருக்கிறது. இப்போது என்ன செய்துத் தொலைப்பது? விடிந்தால் 5 மணிக்கெல்லாம் வண்டி வந்துவிடுமே...

குப்ப:—என்னமோப்பா! நீ செய்வதெல்லாங்கூட நன்றாக இல்லை. ஆத்திரத்தில் அப்படியா அடிப்பது? அவள் முகத்தைப் பார்க்கவே முடியவில்லையே! நாளைக்கு அவர்கள் எதிரில் அவள் எப்படி நடப்பது?...ஒன்று செய். இப்பவே போயி அவர்களை வரவேண்டாமென்றும் பிள்ளையாண்டான் ஊரிலில்லை என்றும் தந்தியடித்துவிட்டு வா...பிறகு பார்த்துக்கொள்ளலாம்.

இந்த ரஸமான சம்பாஷணைகளைக் கேட்டுக்கொண்டிருந்த நித்யா அத்தனை கேவலமான நிலைமையிலும் பொறுமையை இழக்காமல் அவளுக்கு சுபாவமாயுள்ள புன்னகையுடன் தானாகவே வலுவில் இவர்கள் முன்பு வந்து தணிந்த குரலில் பேசத்தொடங்கி "அம்மா! சுபம் சீக்கிரம்" என்று பெரியவர்கள் சொல்வார்கள். அவர்கள் 'வருகிறேன்' என்று தந்தியடித்திருக்கையில் வேண்டாமென்று அபசகுனம்போல் சொல்லக்கூடாது. நான் இப்போதே தாமோதரனை அனுப்பி அவனைத் தேடி அழைத்துவரச்சொல்கிறேன். வருகிறவர்கள் வரட்டும்' என்று சொல்லிவிட்டு உள்ளேபோனாள்.

அப்போதுதான் ஹரிஹரன் விளக்கு வெளிச்சத்தில், நித்யாவின் கன்னம் புடைத்திருப்பதையும் விரல்கள் பதிந்து கிடப்பதையும் பார்த்ததும் அவனையறியாது தூக்கிவாரிப்போட்டது. 'ச்ச்ச்ச்சுச்சு' என்று தனக்குள் சொல்லிக்கொண்டே வாசலுக்குப் போனான். 'நாம் நித்யாவிடம் இத்தனை கடுமையாகவா நடந்துகொண்டோம்?' என்று நினைக்கும்போது நெஞ்சு திடுக்குற்றது. 'உள்ளே போய் நித்யாவை விசாரிக்கலாமா?' என்று நினைத்தான். ஆனால் மனது பின்னடைந்தது. குட்டியிட்ட பூனையைப்போல் இங்குமங்கும் உலாவி

ஞன். தன்னுடைய ஸ்ரீமத்கம்பீரத்தையும் விடாது பேசாமல் ஒரு பத்திரிகையைப்பிரித்து வைத்துக்கொண்டு சோபாவில் உட்கார்ந்தான்.

அடுத்த அறையில் நித்யா தாமோதரனைக் கூப்பிட்டு "தம்பீ! யாதவனை நீ எங்காவது போய்த் தேடி இன்று இரவுக்குள் அழைத்துவர வேண்டும். நீ எத்தகைய தடங்கலும் சாக்குப் போக்கும் சொல்லக்கூடாது" என்றாள்.

தாமோ:—நான் உனக்காக எதை வேண்டுமாயினும் செய்கிறேன். அவன் பலர் எதிரில் என்னைத் திட்டி, அடித்து அவமானப் படுத்தினால் என்ன செய்வது! இதற்கு நான் கவலைப்படுகிறேன்.

நித்:—தாமூ! நான்தான் முதலிலேயே சொல்லிவிட்டேனே! நீ எதற்கும் மனந்தளராதே. உன் பொறுமை உனக்குப்பெருமையே கொடுக்கும்' என்று நான் சொல்லும் வாக்கை சத்ய வாக்காக எண்ணு. உம். போ...சீக்கிரம் போ!—என்று அவனை அனுப்பினாள்.

தன் தாயாரைக் கூப்பிட்டு "அம்மா! நடுக்கட்டு ஹாலை நன்றாக சுத்தி செய்து முறமுறப்பாக வை. விடியற்காலை காப்பி, இட்டிலி, பாதாம் ஹல்வா எல்லாம் தயார் செய்யச்சொல்லு. அப்பாவை மாடியிலேயே இருக்கச்சொல்லு. அனாவசியமாய் எங்க மாமி யாரிடம் வாயைக் கொடுக்காதே! என்ன சொன்னாலும் பேசாமல் போய்விடு' என்று நிதானமாகக் கூறினாள்.

சுதாவை அழைத்து, "சுதா! விடியற்காலையில் சம்மந்திகள் வரப் போகிறார்கள். நீ தினம்போல் 7 மணிவரையில் தூங்காதே. 5 மணிக்குமுன்பே எழுந்து தாமுவுக்கும் ட்ரஸ் பண்ணி நீயும் நன்றாக அலங்காரம் செய்துகொண்டு சுறுசுறுப்பாயிரு. உன்னைப் பார்த்ததுமே "ஓகோ! தங்கையைப்போலத்தான் அண்ணனும் அழகாய் சுறுசுறுப்பாயிருப்பான் என்று அவர்களுக்குத் தோன்றும். என்ன! தெரிந்ததா" என்றாள்.

அந்தோ! பேதைப் பெண்ணின் குதூகலமும் எதிர்பார்ப்பும், காணக்காண ஞானம்பாளுக்கு வியப்பாகவே இருந்தது. பிள்ளையைப் பார்க்க வரும்போதே இத்தனை ஆர்ப்பாட்டம் செய்யும் இவள் கல்யாணத்தின்போது என்னதான் செய்வாளோ! அந்தத் தறிதலை மகன் இவளை இத்தனை லக்ஷணத்தில் வைத்திருக்கும்போதே இவளுடைய ஆசை கரைகடந்து பாய்கின்றது. இன்னும் தாயைப் போலவே அன்பு காட்டுவானேயானால் எப்படித்தான் துள்ளுவாளோ!" என்று நினைத்து ஒரு பெருமூச்சுவிட்டாள்.

யார் எப்படி நினைத்தால் என்ன! கபடற்ற பரிசுத்த இதயத்துடன் நித்யா இரவைக் கழித்து விடியற்காலையின் ஆனந்த தரிசனத்தை வெகு ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள். பொழுது புலர்ந்த நற்செய்தியைப் புள்ளினங்கள் உத்ஸாகத்துடன் அறிவித்ததும் நித்யா அலையக்குலைய எழுந்து குளித்துப் பின் ஸ்வா

மிக்குப் பூஜையைச் செய்தாள். வேப்பிலையையும் மஞ்சளையும் அரைத்துத் தன் கன்னங்களுக்குப் பற்று போட்டுக்கொண்டாள்.

சுதாவை எழுப்பினள். சமையல்காரர்களுக்கெல்லாம் சீக்கிரம் காப்பி, டிப்பன் தயாராகும்படி ஆக்ஞாபித்துக் காரை ஸ்டேஷனுக்குக் கொண்டுபோகும்படி டிரைவரை அனுப்பினள்.

மாடிக்கு ஓடிப்போய் யாதவனை எழுப்பி நன்ருக உடையணியும்படியாகக் கூறிவிட்டுவந்தாள். நித்யாவின் பரபரப்பும் ஆவலும் ஹரிஹரனை பிரமிக்கச் செய்தன. மெல்ல உள்ளே வந்தான். 'நித்யா!' என்று கூப்பிட்டான்.

நித்யா வழக்கம்போலவே மரியாதையுடன் எழுந்து நின்ருள். தாடைமுற்றும் பத்து போட்டிருந்ததால் தலைகுனிந்து மௌனமாக இருப்பதைக் கண்ட ஹரிஹரனின் இதயத்தில் ஏதோ சகிக்கவியலாத சங்கடம் செய்தது. படபடவென்று நெஞ்சம் அடித்துக் கொண்டது. மெல்ல நித்யாவின் அருகில் சென்று "நித்யா! ஏதோ முட்டாள்தனமாகநடந்துவிட்டதற்கு என்னைமன்னிப்பாயா!" என்று அவளுடைய முகவாய்த்தாளைப் பிடித்துக்கொண்டு கேட்டான்.

நித்யாவின் தேகம் சிலிர்த்தது. அவளையறியாது மனத்தில் ஒரு விதமான எழுச்சி பொங்கி எழுந்து அந்த வேகம் கண்களில் பிரகாசித்தது. குனிந்த நிலையில் நின்ற அவள் நிமிர்ந்து கணவனின் முகத்தை ஏறஇறங்கப் பார்த்தாள். "இந்த அடிமையினிடத்தில் இத்தகைய பெரிய வார்த்தைகள் சொல்வது சற்றும் தகாது. நம்மெல்லோரையும் பகவான் பார்த்து மன்னிக்கவேண்டுகிறேன்" என்று கூறும்போது அவள் கண்களில் கலகலவென்று நீர் உதிர்ந்தது.

ஹரிஹரன் திக்குமுக்காடித் தயங்கும் சமயம் மோட்டார் ஹாரன் கேட்டது. நித்யா பரபரப்புடன் கண்ணைத் துடைத்துக் கொண்டு"அதோகார்வந்துவிட்டது.போங்கள்"என்றுஅனுப்பினள்.

அதற்குள் சுதா ஓடிவந்து "அம்மாம்மா! பெண் வீட்டுக்காரா வந்துட்டா! அந்த மாமி ரொம்ப அழகாய் உன்னைப்போலவே இருக்கிரு" என்று குதித்தவாறு கூறினள். இதற்குள் குப்பம்மாளும் "அம்மா நித்யா! அதோ அவா வராள் பாரு" என்று தன் னருமையை அப்போதுதான் காட்டினள்.

நித்யா எழுந்துபோய் அவர்களை எதிர்கொண்டழைத்துவந்து சோபாவில் உட்காரவைத்தாள். "நீங்கள் வந்தது மெத்தசந்தோஷம். வண்டி பத்து நிமிஷம் தாமதமாகி வந்ததுபோலிருக்கே. கும்பல் இல்லாது இடம் கிடைத்ததா!" என்று கேட்டாள்.

இரண்டு பெண்பிள்ளைகளும் இரண்டு ஆண்பிள்ளைகளும் வந்திருந்தார்கள். அவர்களில் சற்று பெரியவள் பேசத்தொடங்கி "நாங்கள் இரண்டாவது வகுப்பில் வந்தோம். கூட்டமே இல்லை. இன்று சற்று லேட்டுதான். உங்களுக்கென்ன உடம்பு? கன்னத்தில் என்ன பத்து போட்டிருக்கிறது?" என்ருள்.

நித்யா:—எனக்கு புட்டாளம்மை வந்திருந்தது. அதற்காக வேப்பிலையும் மஞ்சளும் பத்துபோட்டேன். ஜுரம்கூட வந்தது. இப்போது தேவலை. நீங்கள் வரப்போவதாக வந்த தந்தியைப் பார்த்ததுமே எனக்குச் சந்தோஷத்தினால் உடம்புகூட குணமாகி விட்டது. உங்கள் பெண்தானு கல்யாணப் பெண்?

வந்தவள்:—என்னுடைய தங்கை இந்தம்மாள்; இவளுடைய பெண்தான் கல்யாணப் பெண்...கல்யாணப் பிள்ளை உங்கள் தம்பியா! இந்தம்மாள்தான் உங்கள் சிறிய தாயாரா!"...என்று ஞானும் பாலைக் காட்டிக் கேட்டதும் ஞானத்திற்குத் தூக்கி வாரிப்போட்டது. முகத்தில் அசடுவழிந்தது. குப்பம்மாளின் முகமும் மாறியது.

ஆனால் வைராக்யச் சுடராய் விளங்கும் நித்யாவுக்கு ஒருவித மான கலக்கமும் உண்டாகவே இல்லை. அவளுடைய சுபாவத்தின்படி கலகலவென்று சிரித்தாள். "நான்தான் உங்கள் சம்மந்தியம்மாள். உங்கள் பெண்ணின் மாமியார் நான்தான். அவள் என்னுடைய தாயார். இதோ இந்த கண்மணிகள்தான் உங்கள் மாப்பிள்ளையின் உடன்பிறந்தவர்கள். சுதா! தர்மூ! இவர்களுக்கு நமஸ்காரம் செய்" என்றாள்.

இத்தனை சாந்தமாய் புன்னகை பூத்த முகத்துடன் பேசியதைக் கண்ட அவ்விருவர்களுக்கும் நம்பவே முடியவில்லை. வியப்புக் குறி முகத்தில் தாண்டவமாடியது. ஒருவருக்கொருவர் பார்த்துக் கொண்டு பரிதாபப்படுவதை நித்யா பார்க்காமலில்லை. ஆனால் பதில் ஒன்றும் பேசவில்லை.

வந்:—அம்மா! ஏதோ தவறுதலாகக் கேட்டுவிட்டேன். கோபித்துக்கொள்ளக்கூடாது மன்னிக்கவேண்டும். உங்கள் குணத் தழகைக் காண எங்கள் உள்ளம் பாகாயுருகுகிறது...மாப்பிள்ளை எங்கே இருக்கிறார்? நாங்கள் பார்க்கலாமா? என்றாள்.

நித்யா:—இதற்கென்ன கோபம். உலகத்தில் சகஜந்தானே! மாப்பிள்ளையை பார்க்கத்தானே வந்திருக்கிறீர்கள். பேஷாய்ப் பார்க்கலாம். முதலில் காப்பி சாப்பிடுங்கள்—என்று கூறி காப்பி டிப்பன் கொடுத்தாள். பிறகு "சுதா! அண்ணாவைக் கூப்பிடம்மா!" என்றாள்.

வந்:—வேண்டாம். வேண்டாம்...நாமே போய் பார்க்கலாம் வாருங்கள்—என்று எழுந்தாள். அதற்குமேல் தடங்கல்சொல்ல முடியாமல் எழுந்து அவர்களை அழைத்துக்கொண்டுமாடிக்குச்சென்றாள்.

யாதவ் வெகு குசாலுடன் கையில் சிகரெட்டைப் பற்றவைத்துக்கொண்டு அந்தப் புகையை உறிவதையும், விரலிடுக்கில் வைத்துக் கொண்டு ஒய்யார நடை நடந்தபடி சினிமாப் பாட்டு ஒன்றின் மெட்டைவிசிலடித்துக்கொண்டிருப்பதையும் அந்தஓசையினாலும்சிகரெட்டின் நாற்றத்தினாலும் அறிந்த நித்யாவுக்கு ஒரு குலுக்கு குலுக்கியது. 'இந்த திருக்கோலத்தில் மருமகப்பிள்ளையைப் பார்த்தால்

அவர்களுக்கு என்ன எண்ணம் எண்டாகும்!' என்று பெருங்கவலே யுண்டாகிவிட்டது. அதை வெளியில் காட்டிக்கொள்ளாமல் மாடி யில் ஒரு அறைக்குள் அழைத்துச்சென்று அங்கு மாட்டப்பட்டி ருந்த படங்களைக் காட்டி "இதோ பாருங்கள். இந்த படங்கள் பூராவும் உங்கமாப்பிள்ளையின்தாயார் தம் கையினுலேயேபோட்டது. அத்தனை புத்திசாலியின் வயிற்றில் பிறந்தவன் உங்கள் மாப்பிள்ளே என்பதற்காக இதைக் காட்டினேன்" என்று கூறிக்கொண்டே அவர்களுடைய கவனத்தைப் படத்தில் திருப்பப் பார்த்தாள்.

அவளைவிட கெட்டிக்காரி பெண்ணின் தாயார். அவைகளை ஒரு சுற்று அப்படி பார்த்தவாறு "உம்.இதைவிட இன்னும் அழகானவை களும் அபாரமான கற்பனையுடன் கூடியதுமான படங்களை உங்கள் நாட்டுப்பெண் ஏராளமாகப் போட்டு வைத்திருக்கிருள். பெண் ணேடுகூட அவைகளும் சீராக வரும்" என்று கூறியபடி முன் கூட்டியே நடந்தாள்.

யாதவ் உலாவும் அறைக்கதவு திறந்திருந்ததால் அவன் உலாவு வதை வெகு எளிதில் பார்த்தும் விட்டார்கள். ஆனல் அவனை மாப் பிள்ளையாக நினைக்கவே இல்லை. அந்த அறைக்கு எதிர்ப்புறம் வராண் டாவில் நிற்கும் தாமோதரனைப் பார்த்து அவன்தான் கல்யாணப் பிள்ளை என்று தீர்மானம் செய்துகொண்டு அவனையே உற்றுப் பார்த்தோடு 'பையன் வெகு அழகாயிருக்கிருன். புகைப்படத் திற்கும் நேரில் பார்ப்பதற்கும் நிரம்ப வித்தியாஸமிருக்கிறது. வித் யாஸமென்ன அசலே வேருகத் தோன்றுகிறது' என்று அக்காவும் தங்கையும் குசுமுசவென்று பேசிக்கொண்டார்கள்.

நித்யாவுக்கு மனத்தில் சித்திரவதை செய்கிறது. தாமோதர னைப் பார்ப்பது அவளுக்கு நன்ருகத் தெரிந்துவிட்டது. அவள் தவித்துகொண்டிருக்கையில் பெண்ணின் தாயார் பேசதொடங்கி "பிள்ளை மிகவும் பிடித்திருக்கிருர்...அந்த சோதாப்பயல் யாரு? பீடி யும் விசிலும் தடபுடல்படுகிறது. உங்கள் வீட்டில்கூடவா இதற்கு இடம் உண்டு?" என்று வெடிகுண்டெறிவதுபோல் சொன்னுள்.

இந்தப் பாணப்ரயோகத்தைக் கேட்ட நித்யாவின் முகம் சுண்டியது. என்ன பதில் சொல்வதென்றே தெரியாமல் தத்தளித் தாள். யாதவனுக்கு எத்தனை சமிக்ஞை செய்தும் அவன் தெரிந்து கொள்ளவே இல்லை. 'இவன்தான் கல்யாணப்பிள்ளை' என்றுஎப்படி சொல்வது என்று திகைக்கும் சமயம் தர்மாம்பாள் கீழேயிருந்து ஓடிவந்து, யாதவன் கையைப் பிடித்து இழுத்தவாறு "அண்ணு! அண்ணு! அப்பா உன்னைக் கூப்பிடுகிருர். கீழே வா!....உன்னை பெண்வீட்டு மாமா பார்க்கவேண்டுமாம்" என்று கூப்பிட்டாள்.

இதைப் பார்த்தபிறகு அவ்விருவரையும் ஓரேயடியாகத் தூக்கி வாரிப்போட்டது. இவரா கல்யாணப் பிள்ளை! "இவருக்குத்தான் படத்தின் சாயல் நன்ருகத் தெரிகிறது...உம்" என்று ஒரு பலத்த

பெருமூச்சுவிட்டவாறு 'அந்தபிள்ளையாண்டான் யாரு?' என்றார்கள்.

வெட்கத்தினால் முகம் சுருங்கியவாறு நித்யா மெல்ல பேசத் தொடங்கி "அவன் என்னுடைய தம்பி" என்று மட்டும் கூறி நிறுத்திக்கொண்டாள்.

வந்:—உங்கள் தம்பியா! வெகு அழகாயிருக்கிறார். என்ன படிக்கிறார்? சொத்து என்ன இருக்கும். உங்கள் கோத்திரம் என்ன! அவருக்கு வயது எத்தனை?' என்று வரிசையாகக்கேட்டுக்கொண்டே போவதைக்கேட்ட நித்யாவுக்கு விளங்கிவிட்டது. பெரிதாக நகைத்துக்கொண்டே, "அம்மணி! மலைக்கும் மடுவுக்கும் எத்தனை பொருத்தமோ அத்தனை பொருத்தமான நினைப்புத்தான் தாங்கள் நினைப்பது. அவனுக்கு 16 வயதுதானாகிறது. S. S. L. C. படிக்கிறான். தரித்திர நாராயணன் அவன்தான். அவனுக்கிருக்கும் சொத்துக்கள் அவனுடைய அந்தகமான தந்தையும், பேதைத்தாயும், உத்தம குணமும், ஒழுக்க சீலமும், சத்தியநெறியும், சாந்தமும் அறிவும்தானாகும்...

பெண்ணின் தாயாருக்குப் பெரிய ஏமாற்றமும் வியப்பும் உண்டாயின. நித்யாவின் அழகும் அதற்குச் சிகரம் வைத்தது போன்ற நல்ல அமிருதகுணமும் அவர்களை பிரமிக்கச் செய்தன. இருந்தும் என்ன செய்வது? வெறும் சோதாவாகவிருக்கும் பிள்ளைக்குப் பெண்ணைக் கொடுத்துவிட்டு யார் அவஸ்தைப்படுவது? என்று மனம் வெறுத்துவிட்டதால் அடுத்த வண்டிக்கே ஊருக்குப் போக முடிவு செய்துவிட்டார்கள். தாமு வயதுக்குமேல் வளர்த்தியாயிருக்கிறானே யன்றி வயதுமட்டும் கொஞ்சம் அதிகம் ஆகியிருக்குமானால் பெண்ணைக் கொடுத்துவிடவே நினைத்தார்கள். அதுவும் தோற்றுவிட்டதால் மௌனம் சாதிக்கவாரம்பித்தார்கள்.

இவர்களின் முகபாவத்தைக் கண்டதும் நித்யாவுக்குப் புரிந்துவிட்டது. அவளுக்கு மேலே என்ன பேசுவது என்று தெரியவில்லை. எல்லோருக்குமிடையில் கல்லறையின் நிச்சப்தம் குடிகொண்டது. அச்சமயம் பிரண்டை பாட்டி (இது குப்பம்மாளுக்கு ஊரார் ரகஸியமாகச் சூட்டி வழங்கிவரும் திருநாமமாகும். அப்படியே இனி நாமும் கூப்பிடுவோம்) அங்குவந்து 'என்ன மாப்பிள்ளையைப் பார்த்தீர்களா! ராஜாவாட்டமா இருப்பான். அவனுடைய குணமும், ஒழுக்கமும், மரியாதையும் சொல்லவேமுடியாது. ஒரு கெட்ட சகவாஸத்திற்கும் போகமாட்டான். தகப்பனார் கீறியகீற்றிற்குத் தாண்டவேமாட்டான். தங்கக்கம்பி என்றால் தகும்.'...

என்று பேரப்பிள்ளையைப்பற்றி தோத்திர பாடம் படிப்பதைக் கேட்கும் நித்யாவுக்குச் சங்கடம் செய்கிறது. பெண்வீட்டுக்காரர்களுக்கு தாங்கமுடியாத சிரிப்பு வந்துவிட்டது. அதைச் சிரமப்பட்டு அடக்கிக்கொண்டு, "பாட்டீ! நீங்கள் சொல்லவே வேண்டாமே! நாங்கள்தான் நேரிலேயே பார்த்தாயிற்றே!" என்று கூறினார்கள்.

பிரண்டை கிழத்திற்கு இதன் அர்த்தம் என்ன தெரியும்? உச்சி

குளிர்ந்துவிட்டது. அதை வெளிப்படுத்துவதற்கு வாயும் பிளந்து விட்டது. நித்யாவுக்கோ சுருக்கென்று பொத்துகிறது. முகத்தில் சந்தோஷமே மறைந்தது. அதே சமயம் புருஷர்கள் இவர்களைக் கூப்பிடுவதாக தர்மராஜு கூப்பிட்டான். பெண்மணிகள் இருவரும் நாங்கள் போய்வருகிறோம்' என்றார்கள்.

பிரண்டைபாட்டியா சும்மாவிருப்பவள்? தானே பேசத் தொடங்கி, "இதற்குள்ளாகவா போவது? சாப்பிட்டுவிட்டு இந்த ஊர் ஸ்வாமியை சேவித்துப்பின் சாயங்கால வண்டிக்குப் போக லாமே. நாங்கள் என்று நிச்சயதார்த்தம் செய்ய வருவது!" என்றாள்.

வந்த:—நாங்கள் ஊருக்குப்போய் கடிதம் எழுதுகிறோம். அவ சரமாக இப்போதே போகவேண்டும். வருகிறோம்' என்று கூறிக் கொண்டே எழுந்துவிட்டார்கள்.

நித்யா வெத்திலைபாக்குக் கொடுத்தாள். விஷயம் விளங்கிவிட்ட தால் பேசாமலிருந்தாள். வந்தவர்களும் மௌனமாகப் போய்விட் டார்கள். நித்யாவின் மனக்கோட்டை இடிந்துவிட்டதால் அப் படியே சோபாவில் சாய்ந்தாள்.

17

"மாமா! இதோ பாருங்கள். இந்த பாட்டிற்கு நானே பதம் பிரித்து அர்த்தம் எழுதவேண்டுமாம். 'குஞ்சியழகும்' இதற்கு என்ன அர்த்தம் மாமா!" என்று சுதா தாமோதரனைக் கேட்டாள்.

தாமோ:—இதுதான் பெண்களுக்கு மிகவும் முக்கியமான பாட்டும்மா! பெண்களுக்கு மஞ்சள் பூசுவதாலும் அழகான சேலை கட்டுவதாலும், கூந்தலை அழகாக வாரிப் பின்னுவதாலும் உண் டாகும் அழகுமட்டும் அழகல்ல. கல்வி, நல்லொழுக்கம், நாணயம் முதலியன உண்டாவதுதான் அழகு" என்று அர்த்தம். இதை நான் சொல்கிறேன்; நீ சரியாய் எழுதிக்கொள்ளு.

சுதா:—மாமா! முதலில் இந்த இங்கிலீஷ் பாடத்தைச் சொல்லிக் கொடுத்துவிடுங்கள். பிறகு அதை எழுதலாம். உங்களிடம் பாடம் சொல்லிக்கொள்ள ஆரம்பித்தபிறகுதான் எனக்கு கிளாஸில் நல்ல மார்க்கு வருகிறது. நான்தான் முதல் பெண்ணாகவும் இருக்கிறேன். முன்பு சொல்லிக்கொடுத்தாரே அது எனக்குப் பிடிக்கவே இல்லை. அப்போது நான் ஒருதரம் பரீக்ஷையில் முட்டைகூட போடத்தெரிந் தேன். அப்பா சிபார்சு செய்து தூக்கிவிட்டார். அண்ணாவைக் கூட அப்படித்தானே அப்பா அடிக்கடி செய்கிறார். இல்லாவிட்டால் அவன் பள்ளிக்கூடத்தைவிட்டு காலேஜிக்கேவந்திருக்கமாட்டானே.

தாமோ:—சுதா! உன் அண்ணாவின் வார்த்தையே நீ என்னிடம் எடுக்காதே. நான் கடவுளே என்று கிடக்கும்போதே உன் அண்ணாவும் உன் பாட்டியும் என் மண்டையை உருட்டுகிறார்கள். அன்று பெண் பார்க்கவந்தவர்கள் என்னால்தான் அவனுக்குக் கொடுக்க மறுத்துவிட்டார்கள் என்று என் காது கேட்கவே திட்டுகிறார்கள். அந்த சுடுச்சொல்லை என் காதால் கேட்கமுடியவே இல்லை...

சுதா:—மாமா! உங்களை மட்டுமில்லை; என்னையுங்கூடச் சேர்த்து திட்டுகிறான். நான் உங்களிடம் பாடம் சொல்லிக்கொண்டபிறகு புத்திசாலி என்று பெயர் வாங்கிவிட்டேனாம். 'நீ இத்தனை அடிமுட்டாளாயிருக்கிறாயே! உன் தங்கையைப் பாரு. எத்தனை புத்திசாலியாக இருக்கிறாள்?' என்று என் வாத்தியார் கேட்டுவிட்டாராம். அது ரோஷம் பொத்திக்கொண்டது. அதனால் என்னைத் திட்டுகிறான்.

தாமோ:—சுதா! உன்னைத் திட்டுவதற்கு உன் அண்ணனுக்கு உரிமை உண்டு; திட்டுகிறாள். எங்களுக்கென்ன தலைவிதி? எங்கப்பாவின் மனம் கொதிக்கும் வேகத்தில் உடம்பு எப்படி இளைத்துவிட்டது பார்த்தாயா! நானாவது எப்படியோ என் காலவித்யாஸத்தை எண்ணிப்பேசாமலிருக்கிறேன். அத்தனை பெரியவர் அதிலும் அந்தகர் அவர் ஏன் கேட்கவேண்டும்? அக்காவிடம் சொல்லி நான் உடனே இதற்கோர் வழி செய்யப்போகிறேன்" என்று பேசும்போது இதைக் கேட்டுக்கொண்டு தட்டித்தடுமாறியவாறு மூர்த்தி அங்கு வந்தான். "அப்பா, தாமூ! இனி அரை விநாடிகூட நான் இங்கு இருக்கமாட்டேன். குருட்டுப் பிணம் வீட்டிற்கு வந்தவேளை தான் வீடு விடியவில்லை. கல்யாணமும் ஆகாது தடைபடுகிறது" என்று கிழவியும் பேரனும் ஏதேதோ திட்டுகிறார்கள். தாமூ! அக்காவைக் கூப்பிடு" என்று கண்ணீர்வழியக் கூறினான்.

இதைக் கேட்டுக்கொண்டே நித்யா அவ்விடம் வந்து தகப்பனாரின் கைகளைப் பிடித்துக்கொண்டு "அப்பா! கண்ணீர் விடவேண்டாம். உங்களுக்குமுன்பே நான் இந்த தீர்மானத்தைச் செய்துவிட்டேன். தாமுமட்டும் இங்கிருக்கட்டும். கொஞ்சம் கஷ்டத்தைப் பொறுத்துக்கொண்டு இந்த படிப்பை முடித்துவிட்டால் பிறகு எங்காவது பத்து காசு சம்பாதித்து உங்களைக் காப்பாற்றுவான். இன்றே நீங்களிருவரும் ஊருக்குப் போக ஏற்பாடு செய்துவிட்டேன். முன்பு எழுதிக்கொடுத்த சீட்டு ரிஜிஸ்டர் செய்யாததால் அது காலாவதியாகிவிட்டது. மாதம் 15 ரூபாய் கொடுத்துவிடுகிறாராம். நீங்கள் இந்த இம்ஸையிலிருந்து விலகி சந்தோஷமாயிருங்கள்....தாமூ! இன்றே இவர்களை அழைத்துப்போய் முன்பிருந்த கிராமத்தில் விட்டுவிட்டு வேண்டிய வசதிகளைச் செய்து வா....என்றாள்.

மூர்:—இரண்டாயிரம் ரூபாயிக்கு முன்பு செக்குக் கொடுத்துவிட்டு அதை மாற்றி வேண்டியபோது தருவதாகச் சொன்னாரே! அது என்னவாயிற்று?

நித்:—அப்பா! என்னவாயிற்று! உங்கள் நேத்திரங்களைப் போலாயிற்று. அதை இனி கொடுக்கமுடியாதாம். வீண் ரஸாபாஸம் வேண்டாமென்று இதையாவது கொடுக்கட்டுமென்று நான் ஒரு முடிவு செய்தேன். இனிமேல் கேட்பதில் பயனில்லை. அனாவசியமான சண்டை வேண்டாம். அந்த பத்திரத்தை என் மாமியாரே என் பெட்டியிலிருந்து திருடிக் கிழித்துவிட்ட ரகஸியத்தையும் நான் நேற்றிரவுதான் அறிந்தேன். நான் என்னவிதமான கஷ்டமும் பட்டு உங்களைக் காப்பாற்ற அரும்பாடுபட்டும் என் பாவம் அதை நிறைவேற்றத் தடுக்கிறது. மரியாதையாய் இங்கிருந்து பிரிந்துவிடவே நான் துணிந்துவிட்டேன்—என்று விசனமும் ஆத்திரமும் ததும்பக் கூறினள்.

இதைக் கேட்டுக்கொண்டு வந்த ஞானம்பாள் "உம். அந்த பணமும் பத்திரமும் வீண் பகட்டுக்குத்தான் என்று நான் முன்பே நினைத்தேன்; அப்படியே முடிந்தது. நித்யா! மகா பாவிகளின் வயிற்றில் பிறந்ததனுல்தான் இந்த கஷ்டங்கள் அனுபவிக்கிருய். எங்களால் இன்னும் என்னென்ன இம்சைப்படவேண்டுமோ யார் கண்டது? கடவுளுக்கும் கண்ணில்லை. 3 வருஷமாயும் உனக்கு ஒரு குழந்தை பிறக்க...

என்று முடிப்பதற்குள் நித்யா சற்று கோபத்துடன் பேசத் தொடங்கி, "அம்மா! நான் உனக்கு எடுத்துச் சொல்லும்படியாக நீ பேசுவது சற்றும் அழகாயில்லை. நாம் செய்த மகத்தான கர்மத்திற்குக் கடவுளை நொந்து பேசுவது முட்டாள்தனமல்லவா! நீ குறைபடுவதுபோல் என் மனத்தில் லவலேசமும் குறை கிடையாது...'பகவானே! இந்த நான்கு குழந்தைகளும் தீர்க்காயிசாயிருந்து அவர்களால் நான் ஏற்றமடைந்தால் போதும். என்னை ஒரு சோதனைக்கும் ஆளாக்கிவிடாதே!' என்று நான் இரவு பகல் பகவானை வேண்டுகிறேன். எனக்கு நேர் எதிரிடையாக உள்ளது உன் பிரார்த்தனை. என்னைப்பற்றி நீ கவலையே படாதேம்மா! தம்பிக்கு ஒரு வழி ஏற்பட்டு அவன் உங்களைக் காப்பாற்றும் சக்தியைப் பெற்றுவிட்டால் அப்போதுதான் என் மனோரதம் நிறைவேறியதாகும். ஆண்டவனின் திருவருள் எப்படியிருக்கிறதோ!" என்று கூறும்போது அந்தகனுகிய திருமூர்த்தி விம்மிவிம்மி அழுவதைக் கேட்டு நித்யாவின் இதயம் துடிதுடித்தது.

தகப்பனுரின் கண்களைத் துடைத்து அவரைச் சமாதானம் செய்தாள். என்ன செய்தும் பெத்தமனமல்லவா! நிலை கொள்ளுமா! தம்பொருட்டு ஒரு அழகிய யௌவன மங்கை தன்னுடைய இன்ப வாழ்க்கையையே தியாகஞ்செய்ததோடு சந்தோஷம் என்பதை அடியோடு வெறுத்து வைராக்கிய பிம்பமாய் விளங்குவதைப் பார்க்கக் குடல் கொதித்தது.

இனி எது செய்துதான் என்ன பலன்? கண்கள் அந்தக மாயிற்று என்றால் வாயும் ஊமைபோலாயிற்று. பேசவே தெரியாது தவித்தான். பிறகு நித்யா அவர்களது பிரயாணத்திற்குச் சித்தம் செய்து அன்று பகல் வண்டிக்கே அவர்களை அனுப்பிவிட்டாள். அவர்கள் பிரியும்போது நித்யாவின் இதயம் பட்டபாட்டை அவ ளால் சகிக்கவேமுடியவில்லை. சின்னகுழந்தையைப்போல் தேம்பித் தேம்பி அழுது முகமெல்லாம் வீங்கிவிட்டது.

ஆகாரமே கொள்ளவில்லை. அருமையான தன் பெற்றோரின் பொருட்டுத் தான் செய்த தியாகத்திற்கு முழு பலனும் கிடைக்கும் என்று எண்ணி மனப்பால் குடித்து ஏமார்ந்த விசனத்தைத் தாங்கவேமுடியாது துடித்தாள். தங்கள் இருவரையும் பிரிந்து அவர்கள் என்ன கஷ்டப்படப்போகிறார்களோ! என்று நினைக்கும் போது அவளுடைய பெற்றோரின் ஆதி சரிதை முற்றும் நினைவிற்கு வந்தது. ஒரு நிமிடம் பள்ளிக்கூடத்திலிருந்து வருவதற்குத் தாமத மானால்கூட வழிபார்த்து விழிபூத்துவிடுமே. இப்போது என்ன செய்வார்கள்? அம்மாவுக்கோ, ஒன்றுமே தெரியாது. அப்பாவுக்குத் தான் சொல்லவேண்டாம். ஒரு கடைச்சாமான்வாங்குவதற்குக்கூட நம்பிக்கையான மனிதர்கள் யார் இருக்கிறார்கள்? யாரை நம்பினாலும் நம்பிக்கைத் துரோகந்தானே செய்வார்கள். அப்பாவின் பொழுது எப்படி கழியும்? அவருக்கு ஆறுதலாகப் பேசக்கூடியவர்கள் யார் இருக்கிறார்கள்?'' என்றெல்லாம் எண்ணி எண்ணி மனம் புண்ணாகித் தவித்து உருகினாள்.

அவர்களின் பிரிவுக்காக ஒரு ஆத்மா அவஸ்தைப்படும்போது பிரண்டைப்பாட்டியும் அவளுடைய அருமைப்பேரனும், 'அப்பாடா! சனிகள் ஒழிந்தன. இனி வீடு உருப்படும். தரித்திர மூதேவியும், குருடும் வீட்டில் வந்தநாள்முதல் கால் காசு வருமானம் இல்லாது போயிற்று. இந்த மூதேவிகளைக் கண்டாலே பெண் கொடுக்க வரு பவர்களும் வெறுத்துப்போகிறார்கள். இனி அம்மாதிரி சங்கடம் எதுவும் வராது. பீடைகள் ஒழிந்தன. உங்கப்பாவும் சொல்லவும் கூடாமல் மெல்லவுங்கூடாமல் தவித்தான். வாயைத் திறந்தால் அந்த வாயாடி ஏதாவது பிடித்துக்கொள்ளப்போகிறாளே என்று நடுங்கினான் பாவம். இப்போது அவனுக்கும்சந்தோஷமாயிருக்கும்'...

என்று குதூகலித்துப் பேசுவதைக் கேட்ட நித்யாவுக்குப் பின்னும் சங்கடம் செய்தது. தன் கணவன்கூடவா இவர்களைப் போல் வெறுத்தார் என்பதை யறிய 'அவர்களை ஏன் இதுபரியந்தம் மடத்தனமாக வைத்துக்கொண்டிருந்தோம்?' என்று புழுவாய்த் துடித்தாள். நடந்த காரியம் நடந்துவிட்டது. இனிமேல் என்ன வருந்தி என்ன பயன்? உரலில் தலையைக் கொடுத்தபிறகு உலக் கைக்குப் பயந்தால் முடியுமா! சகலத்தையும் பொறுத்துக்கொண் டிருந்து என் தாமுவுக்கு ஒரு வழி செய்தால் போதும்'' என்று

தனக்குள் எண்ணுததும் எண்ணி மனம் புண்ணுகித் தவித்தவாறு தன்னை மறந்து படுத்துவிட்டாள்.

சாயங்காலம் சுதா பள்ளிக்கூடத்திலிருந்து வரும்போது ஒரே குசாலாகவும் பிடிக்கமுடியாத சந்தோஷத்துடனும் ஓடிவந்து, "அம்மா! அம்மா! இதோபாரம்மா! நான் இன்று நூறு மார்க்கு வாங்கினேன். மாமாவிடம் காட்டுவதற்காக நேரே ஓடிவந்தேன். அவர் எங்கேம்மா!" என்று தன் மனத்தில் பொங்கும் ஆத்திரம் முற்றிலும் காட்டிக் கேட்டாள்.

சுதாவின் அன்பு நிறைந்த உள்ளத்தின் ஆழத்தை நித்யா நன் கறிவாளாதலால், உண்மையை அறிந்தால் அவளுக்கு துக்கமாக விருக்கும் என்று சற்று தயங்கினுள்.

நித்யாவின் கண்கள் கோவைப்பழம்போல் சிவந்து முகம் வீங்கி இருப்பதைப் பார்த்ததும் ஸுதாவைத் தூக்கிவாரிப்போட் டது. "அம்மா! ஏன் உன் கண்கள் இப்படி சிவந்திருக்கு? முகம் வீங்கிக் கிடப்பானேன்? அப்பா என்னவாவது திட்டி அடித்தாரா! சொல்லும்மா... அம்மா!"....என்று வாஞ்சை ததும்ப நித்யாவைப் பிடித்துக் குலுக்கியவாறு கேட்டாள்.

நித்யாவுக்கு மனது தாங்காது கண்ணீராய் வழிந்தது. வாய் திறக்காது ஒரு சோகச் சிரிப்பு கலகலவென்று சிரித்தாள். பிறகு ஸுதாவை அணைத்துக்கொண்டு, "ஸுதா! தாதா, பாட்டி இரு வரையும் அழைத்துக்கொண்டு மாமா ஊருக்குப் போய்விட்டான்' என்று மெல்லக் கூறினுள்.

இதைக்கேட்ட ஸுதா தீயை மிதித்தவள்போல் "என்ன! தாதாவும் பாட்டியும் ஊருக்குப் போய்விட்டார்களா! நிஜமாகவா! அம்மா! பொய்சொல்லாதே! என்னிடம் சொல்லவே இல்லையே! நான் போய் பார்த்து வருகிறேன்" என்று கூறியவாறு ஓட்டமாக ஓடினுள். மூர்த்தி இருக்கும் இடத்தையும், ஞானம் இருக்கும் இடத் தையும் பார்த்தாள். காலியாகக் கிடந்ததுகண்டு திடுக்கிட்டாள். தாமோதரன் ரூமுக்கு ஓடினுள். அங்கும் காலியாகவிருந்ததைக் கண்டு பின்னும் ஏமாற்றமும் விசனமும் அதிகரித்தன.

அவள் சிறுமியாகவிருப்பினும் அவளை அறியாது கண்களில் மளமளவென்று ஜலம் கொட்டியது. தாமோதரன்கூட திரும்பி வராது ஊருக்குப் போய்விட்டானே, என்னவோ என்கிறசந்தேகம் தோன்றியதால் அவனுடைய துணிமணி சாமான்களும், புத்தகங் களும் இருக்கிறதாவென்று பார்த்தாள். அவைகள் அப்படியே இருப்பதுகண்டு ஒரு சிறிது மனந்தேறியவளாய் அங்கேயே ஒரு நாற்காலியில் உட்கார்ந்தாள்.

ஒரு ஒட்டை பிரம்பு மேஜையே தாமோதரனுக்குக் கொடுக்கப் பட்டிருந்ததால் அதன்மீதுள்ள புத்தகங்களுக்குமத்தியில் தன் புத்

தகம் இருக்கக் கண்டு அதை எடுத்துப் பார்த்தாள். அதற்குள் ஒரு சிறிய துண்டு கடிதத்தில்,

"ஸுதா! இன்னும் நான்கு நாட்களுக்கு நான் உனக்குப் பாடம் சொல்லிக்கொடுக்கமுடியாததுபற்றி வருந்துகிறேன். நீயே புத்திசாலித்தனமாய்ப் படித்துக்கொள்ளு. அண்ணனோடு வீண் சண்டைக்குப் போகாதே. எங்கம்மாவும், அப்பாவும் உன்னிடம் சொல்லிக்கொள்ளாமல் போவதற்கு விசனப்படுகிறார்கள். சொல்லிவிடும்படி எழுதச்சொன்னார்கள்.

இங்ஙனம்,

உன் மாமா..."

என்று வரைந்திருந்ததைப் பார்த்த ஸுதாவின் தேகம் சிலிர்த்தது. ஏதோ நிதி கண்டதுபோன்ற உணர்ச்சியுடன் அக் கடிதத்தை மறுமுறையும் படித்தாள். அதை எடுத்துக்கொண்டு நித்யாவிடம் காட்டுவதற்கு ஓட்டமாக ஓடிவந்தாள்.

எதிரில் வந்த யாதவ் அவள் சந்தோஷத்துடன் ஓடுவதைப் பார்த்து அவளைத் தடுத்து நிறுத்தி "நில்லுடீ கழுதை! எங்கே தலை தறிக்க ஓடுகிறாய்? கையில் என்ன கடிதாசி? இப்படிக் காட்டு" என்று மடக்கினான்.

ஸு:—உனக்கென்ன வந்தது? நான் எப்படியாவது ஓடுகிறேன். என்னவாவது செய்கிறேன். இதை நீ கேட்கவேண்டாம். தினம் பொழுதுபோக்காக நல்ல நல்ல கதைகள் சொல்லிக்கொண்டும், நல்லதோத்திரப்பாடல்கள் சொல்லிக்கொடுத்தும்வந்த தாதாவையும் பாட்டியையுந்தான் நீயும், பேராசை பிடித்த பிரண்டைப் பாட்டியும் சேர்ந்து அடித்துத் துரத்திவிட்டீர்கள். இனிமேல் உங்கள் பாடு குசால்தான்" என்று தன்னைமீறி வெடுக்கென்று கூறிவிட்டாள்.

அவ்வளவுதான் யாதவனுக்குக் கோபம் பீறிக்கொண்டு வந்த வேகத்தில் ஸுதாவை நன்றாக அடித்துத் திட்டும் சப்தம் கேட்ட நித்யா ஓட்டமாக ஓடிவந்து அவளை தடுத்துப் பிடித்துக்கொண்டு "யாதவா! நிறுத்து. அவள் உன் கையில் அகப்பட்ட பொம்மையல்ல. அவள் இன்னமும் உன் கையில் அடி வாங்குவதற்குச் சின்ன குழந்தையல்ல. அவளுக்கு வயது 13 ஆகிற தென்பது ஞாபகமிருக்கட்டும். வீணாக அவளை ஏன் நீ அடிக்கிறாய்? அம்மாதிரி செய்வது அழகல்ல" என்று தான் தாய் என்கிற சுதந்திரத்தைக் காட்டிச் சொல்வதற்குள் யாதவ் ஸுதாவை அடிக்கும் அடிகளில் சில நித்யாவின்மீதும் கடுமையாகப் பட்டன.

நித்யா அதையும் பொருட்படுத்தாது "யாதவ்! என்னை நீ நேரிலேயே அடித்தாலுங்கூட நான் உன் தாயார் என்ற உரிமையை நான் விடமாட்டேன். நான் உனக்குப் புத்தி சொல்லிக்கொண்டுதானிருப்பேன். நீ என்னை விஷமாக நினைத்து வெறுத்தாலும் நான் உன்னை அமிர்தமாகவே எண்ணி உன் க்ஷேமத்தை என் இதய

பூர்வமாக கடவுள் ஆணையாகக் கோருகிறேன். நீ நம்பினாலும், நம்பாவிட்டாலும், எனக்கு அவசியமில்லை. ஆண்டவன் ஒருவன் அறிந்தால் போதும்" என்று கூறும்போது,

யாதவ் இளப்பமாக நகைத்துக்கொண்டே "அதோ! அதோ! கடவுள் வந்துவிட்டார். அப்படியே மெய்மறந்து கவனிக்கிறார். அறிந்தார். அறிந்துவிட்டார். அறிந்தே எஎஎஎ விட்டார்'...என்று பரிகஸித்தவாறு ஓட்டமாக ஓடிவிட்டான். சோதாத்தனமானச் செய்கைக்கு யார் என்ன செய்யமுடியும்? 'பகவானே! என் யாதவனுக்கு நல்ல புத்தியைக் கொடுக்கமாட்டாயா!' என்று வேண்டினாள். அந்த வேண்டுகோளின் உணர்ச்சி கண்ணீராய்ச் சொட்டியது.

18

நல்லதோ! கெட்டதோ! ஒரு விஷயம் பரவுமாயின் அதைப் பற்றிய பிரசாரத்தைப் பொதுஜனங்களே கர்மசிரத்தையோடு செய்வது உலகவழக்கமாகிவிட்டது. அதேபோல் "யாதவ் வெறும் சோதா! நல்ல ஸகவாஸமோ உயர்ந்த குணமோ ஒன்றும் கிடையாது. அவனுக்குப் பெண் கொடுக்க முடியாது" என்று சுமார் ஒரு டஜன் பேர்வழிகள், வந்து பார்ப்பதும் இந்தப் புகழுரையைச் சூட்டிச் செல்வதுமாக ஆகிவிட்டதால் பின்னால் யாருக்கும் வந்து பார்க்கும் தொந்திரவே கொடுக்கவில்லை.

தரகனுக்கும் சலித்துவிட்டது. "உம்...அந்த பிள்ளையா!... ஊஹூம் வேண்டாம். வேறு இருந்தால் சொல்லுங்கள்" என்று பெண்ணைப் பெற்றோர் கேட்கவாரம்பித்தபிறகு ஹரிஹரன் வீட்டிற்குப் பெண்வீட்டார் வருவதும், அனுவசியமாக காப்பி குடிப்பதும் நின்றது. வெத்திலை பாக்குச் செலவும் ஓய்ந்தது. உன் தம்பியா! என்றும், அந்த பெரியவர் உன் தகப்பனா! என்றும் நித்யாவைக் கேட்டு அவள் மனத்தைப் புண்படச் செய்வதும் குறைந்தது. ஆனால் பிள்ளைக்குப் பெண்மட்டும் கிடைக்கவில்லை.

பிறண்டைபாட்டியின் தாபமும் கோபமும் தணிவதற்கு வழியே இல்லை. வருகிற சனியன் பிடித்தவர்கள் சும்மாவேனும் போகக்கூடாதா! தாமோதரனைப் பார்த்து பையன் வெகு அழகு என்று குசமசவென்று பேசிக்கொண்டும் போவதுதான் அவளுக்குக் கட்டோடு பிடிக்கவில்லை. ஏற்கெனவே தாமோதரன்மீது உள்ள வெறுப்பும் கசப்பும் பின்னும் அதிகரித்தன. ஜாடைமாடையாகத் திட்டுவது போதாமல் நேருக்கு நேராகவே சிள்ளு] சிள்ளென்று விழவும் ஆரம்பித்தாள்.

'தலைவிதி தலைவிதி' என்று எத்தனை பொறுத்துவந்தாலும் சிறு பையன்தானே! ஆத்திரமும், துக்கமும் பொங்கி வந்துவிடும். தன் சகோதரிக்காக பொறுத்துப் பொறுத்து உள்ளுக்குள்ளேயே குமுறிப்போகவாரம்பித்தான். தாமோதரனுக்கு வயது ஆகஆக தங்கள் பொருட்டு தன் சகோதரி செய்துள்ள த்யாகத்தின் தத்துவம் நன்கு தெரியவந்தது. அவள்பொருட்டு வாய் திறக்காது இருந்தான்.

இதே வேதனையிலும், விசாரத்திலும் S. S. L. C. பரீக்ஷையில் தேருது போய்விட்டது. இதுவும் விதியின் விளையாட்டுத்தானே! 'மக்குப் பீடையைப் படிக்கவைத்து தண்ட பணம் செலவிட்டுக் குடி நாசமாகத்தான் போகவேண்டும்' என்ற பல்லவி பிரண்டை பாட்டி வாயிலும் பேரன் வாயிலும் தாராளமாகத் தவழவாரம்பித்தது. ஹரிஹரனும் இதையோர் சாக்காக வைத்துக்கொண்டு சில சமயம் சுடச்சுடப் பேசத்தொடங்கினன். நித்யாவின் காது கேட்கமட்டும் பேசமாட்டான்.

"பெட்டியில் வைத்த பணத்தைக் காணவில்லை. ஜேபியில் சில்லரையைக் காணம்" என்ற வார்த்தைகள் பிரண்டை பாட்டியும் யாதவனும் அடிக்கடி சொல்லவாரம்பித்ததுமட்டும் அவனல் சகிக்கவே முடியவில்லை. அப்போதும் அவன் வீட்டைவிட்டுப் போவதாகக் காணவில்லை. எப்படியோ பல்லைக் கடித்துக்கொண்டு மறு வருஷம் படித்து S. S. L. C. பரீக்ஷையில் தேறிவிட்டான்.

சொல்லவும்கூடாமல் தள்ளவும்கூடாமல் தாமோதரன் F. A. வகுப்பில் சேருவதற்கு அரைகுறையாய் ஒப்புக்கொண்டு ஹரிஹரன் தலையை அசைத்தான். கிழவிக்கு இது கட்டோடு பிடிக்கவில்லை. ஜாடைமாடையாய்ச் சொல்லியும் பார்த்தாள். நித்யாவின் வார்த்தையை அத்தனை அலக்ஷியம் செய்து தட்டமுடியாத ஹரிஹரன் தாமுவை காலேஜில் சேர்த்துவிட்டான்.

பிரண்டைப் பாட்டி இதுவரையில் நடந்துகொண்டதற்கு மாருகத் தாமோதரனை நடத்தவாரம்பித்தாள். கடைக்குப்போய் காய்கறி வாங்குவதுமுதல், வீட்டில் ஹரிஹரன் யாதவ் இவர்களின் துணிகள் துவைத்து உலர்த்தும் காரியம்வரையில் இவனிடம் வாங்கத் தலைப்பட்டதால் நித்யாவின் மனம் புண்ணுகியது. துணிமணிகள் துவைக்க ஏற்கெனவே இருந்த ஆளை நிறுத்திவிட்டு வேண்டுமென்று தாமுவைத் துவைக்கச்சொல்வது அவளுக்குச் சகிக்கவில்லை. ஆதலால் அவைகளைத்தானே செய்யவாரம்பித்துத் தம்பிக்கு ஓய்வு கொடுத்துப் படிக்கச்செய்தாள்.

தினம் காலையில் நித்யா வேலைக்காரியுடன் காரில் கடைக்குப் போகவும் கிளம்புவாள் என்று பிரண்டை பாட்டி சொப்பனத்திலும் நினைக்கவில்லை. ஆகையால் அந்த செய்கை ஆச்சரியத்தையும் ஆத்திரத்தையுங் கொடுத்தது. அந்த வேகத்தில் மகனிடம் ஓடினள். 'இந்த அநியாயத்தைக் கேட்பாரில்லேடா! இல்லை. நல்லசெக்குலக்கை

போல் வீட்டில் தின்று கொழுத்து கிடாவைப்போலிருக்கும் தடியனே நான் ஏதோ உனக்கு நாலுகாசு மிச்சம் செய்யலாமே என்ற அங்கலாய்ப்பினுல் வேலே செய்யச்சொன்னேண்டா! அந்த சிறுக்கியே கடைக்குப்போகவும் துணிந்துவிட்டாள். இந்த வெட்கக் கேட்டை என்னென்பது? அடக்குவாரில்லேயா! உன் உத்யோகப் பெருமை என்ன? உன் ராவ்பகதூர் பட்டத்தின் கண்ணியமென்ன? அவள் மார்க்கெட்டுக்குப்போய் கறிகாய்கள் வாங்கும் அவமான மென்னடா! எங்கநாளில் நாங்கள் வாசற்படியைத் தாண்டு வோமா!" என்று பெரிய சுப்ரபாதம் பாடினுள்.

ஹரி:—அம்மா! அவள் கடைக்குப் போவது எனக்குத்தெரிந்த விஷயந்தானம்மா! என் உத்திரவு பெற்றுக்கொண்டுதான் செய் கிருள். வடநாட்டில் பெரிய மனிதர்கள் வீட்டுப் பெண்கள் எல் லோரும் இம்மாதிரி தாமே சாமான்கள் வாங்குவது மிகவும் சகஜ மானதாகும். இப்போது நம்ம தேசத்தில்கூட அனேக பெரிய மனி தர்கள் வீட்டுப் பெண்கள் கடைக்குப் போகிறது சாதாரணமாகி விட்டதால் இதற்குப் பரிகாஸமே கிடையாதம்மா! அதோடு, ஐயோ பாவம்! என்னைக் கட்டிக்கொண்டு அவள் அடையும் சுகமும் சந் தோஷமும் என்ன இருக்கிறது. தாய்தந்தையரையும் பிரிந்து இங்கு கஷ்டப்படும் சிறுமிக்கு இந்த மனச் சாந்தியாவது இருக்கட்டும் என்றுதான் நான் பேசாதிருக்கிறேன். நீயும் ஒன்றும் சொல்லா தேம்மா!" என்று அவனேயுமறியாது சொல்லிவிட்டதுதான் தாமதம்.

பிரண்டை பாட்டிக்கு பிரளயமே வந்துவிட்டதுபோன்ற அதிர்ச்சி உண்டாகியது. "ஐயையோ! எண்டா ஹரிஹரா! நீ கொடுத்த இடந்தான இது? சின்னஞ்சிறுபெண் ஒண்டிசண்டி யாய்க் கடைக்குப்போறதும் சாமான் வாங்கறதும் வெகு அழகுடா! அழகு. பார்ப்பவர்கள் சிரிப்பார்கள். அவளுக்கென்னடா மனக் கசப்புக்கும் சாந்திக்கும் வந்ததுகேடு? மன்மதனுட்டும் கணவன், குபேரனைப்போல் செல்வம், அல்லி ராணியைப்போல் அட்டகாஸம் எல்லாம் இருக்கையில் குறை என்னடா! குறை? தரித்திரத்தின் வயிற்றில், அதிலும் குருடன் மகளுக்கு இதைவிட போகபாக்யம் கிடைத்துவிடுமா!...ஏன்? இந்த காலத்தில் கடைக்குப்போவது இழிவு இல்லே என்ருல் நான்தான் ஒருகுட்டிச் சுவர் இருக்கிறேனே! நானே போகிறேன். நாளேமுதல் அவள் போகக்கூடாது. தெரியுமா!" என்று தனது சட்டத்தை ஒரு சுழட்டுச் சுழட்டி வீசினுள்.

பக்கத்தில் நிற்கும் யாதவ் 'சபாஷ். பாட்டீ!...நன்னுசொன்னுய் அப்பாவுக்குச் சில சமயம் மூளேயே கலங்கிவிடுகிறது...அவள் செய்யும் தந்திரம் இவருக்கு என்ன தெரியும். தானே கடைக்குப் போவதுபோல் போனுல் பணத்தைத் திருடி மிச்சப்படுத்தி அந்தக் குருட்டுக்கோ அல்லது இந்த தண்டபிண்டத்துத் தடிராமனுக்கோ கொடுத்து உதவுவதற்கு இம்மாதிரி செய்கிருள். இது எனக்குத்

தெரியாதா! இல்லாவிட்டால் அந்த அல்பநாய் தாமுவுக்கு நேற்று இரண்டு ரூபாய் ஏது. கடையில் சொக்காய் வாங்கியதை நானே பார்த்தேன். பிச்சைக்காரப் பயலுக்கு திருடினால்தானே ரூபாய் கிடைக்கும்' என்று கூறிக்கொண்டே போய்விட்டான்.

"ஆம்! ஆம்! இருந்தாலும் இருக்கும். யாதவ் சொல்வது உண்மையே!" என்று உரத்தகுரலிலேயே பிரண்டை பாட்டியும் சொன்னாள். இதையும், ஹரிஹரன் பேசாமல் போனதையும் அடுத்த அறையிலிருந்து கவனித்த நித்யாவின் உள்ளம் கொதித்தது. உயர்ந்த தத்துவத்தை நினைத்துத் தான் செய்த மகத்தான த்யாகத்திற்குப் பரிசு இதுதான்போலும். வாக்கு, மனம், காயம் மூன்றினும் நான் ஒருவிதமான குற்றமோ, த்ரோகமோ செய்தறியாதிருக்கும்போது இத்தனை அபாண்டமா என்னைச்சுற்றி இருக்கிறது? உம். யாரை நொந்து என்ன பயன்? என் விதி" என்று நினைத்துக் கண்ணீர் உதிர்த்தாள். "நானே செய்துகொண்ட காரியத்திற்கு நானே வருந்தி என்ன பயன்?" என்று மனத்தை முறித்துக்கொண்டு செயலற்றுக் கிடந்தாள்.

அன்றுமுதல் வீட்டைவிட்டுக் கோயிலுக்குக் கூட போவதில்லை என்ற சபதத்தைச் செய்துகொண்டாள். தாமோதரனிடம் சரியாகப் பேசினால்கூட அவனுக்கு ஏதோ புரட்டிக்கொடுத்து விட்டதாக நினைப்பார்களென்ற எண்ணமும் உண்டாகியது. அவள் ஆயுளில் இன்று உண்டாகியதுபோன்ற துக்கம் இதுவரையில் உண்டாகவே இல்லை என்ற உணர்ச்சியே தோன்றியது.

இதை இன்னும் சோதிப்பதுபோல் அன்று அப்போதுதான் ஞானம்பாளிடமிருந்து கடிதம் வந்ததை தாமோதரன் படித்து விட்டுக் கண்ணீர் பெருக நித்யாவிடம் கொண்டுவந்தான். நித்யாவின் அலங்கோலத்தைக் கண்டு அவன் உள்ளம் பதறியது. சற்று தியங்கினான். கண் மூடியவாறு குப்புறப் படுத்திருக்கும் நித்யாவை நோக்கி "அக்கா! அக்கா! இதோ, அம்மா கடிதம் எழுதியிருக்கிறாள். இந்தா!" என்று கொடுத்தான்.

நித்யா தூங்கி எழுந்திருப்பவள்போல் சாமர்த்தியமாய் கடிதத்தை வாங்கிக்கொண்டு தம்பியை போகும்படிச் சைகை காட்டியனுப்பி விட்டுக்கண்களைத்துடைத்துக்கொண்டு அதைப்படிக்கஆரம்பித்தாள்.

"ஸௌ. நித்யாவுக்கு அனேக ஆசீர்வாதம். உபயக்ஷேமங்கள்.

உன் உத்திரவுப்படியே நான் இதுவரை ஒரு கடிதங்கூட எழுதாதிருந்தேன். இப்பவும் எழுதாதிருக்க என்னால் முடியவில்லை. உனக்குத் தெரியுமோ, தெரியாதோ! இப்போது சில மாதங்களாக 10 ரூபாய்தான் மணியார்டர்வருகிறது. அதுவும் சரியாக முதல் தேதிக்கு வருவதில்லை. நினைத்தபோது வருகிறது. இந்த பஞ்சகாலத்தில் பத்து ரூபாயைக்கொண்டு நாங்கள் எப்படி ஜீவிப்பது? அப்பாவுக்கு உடம்பேசரியாயில்லை,

ஒரு வேளைச் சாப்பாடு சாப்பிட்டுக்கொண்டு நாங்கள் காலந் தள்ளலாமென்று முயற்சித்துப் பார்த்தோம். அதுவும் முடியாததால் இதை எழுதுகிறேன். ஊரில் பஞ்சம் அதிகமாகி விட்டதால் விலைவாசிகளும் அதிகம். திருட்டும் அதிகம். நான் ஆற்றுக்குச் சென்று ஸ்நானம் செய்து நல்ல தீர்த்தம் கொண்டு வருவதற்குள் வீட்டில் உள்ள அரிசி, உப்பு, புளி சாமான்களைக் கூடக் களவாடிச் செல்கிறார்கள். அப்பாவுக்கோ உடம்பு சரியில்லாததால் ஒன்றும் தெரியவில்லை. உன்னைப் பார்க்கவேண்டுமென்று சதா வாய்ப்பிதற்றுகிறார். இச்சமயம் நீயும் உன் கணவரும் ஒரு பிரயாணம் வந்துபோனால் நன்றாயிருக்கும். எங்கள் கஷ்டம் சகிக்கமுடியவில்லை. ஆகையால் இதை எழுதுகிறேன். கோபிக்காதே. எனக்குக் கடிதம் எழுதவும் தெரியவில்லை. ஏதோ எழுதினேன். எங்களுக்காக நீ படும் கஷ்டங்கள் போதாதென்று இதையும் உனக்குக் கொடுக்கிறேன்.

இப்படிக்கு,
ஞானம்பாள்"

இந்த துக்ககரமான கடிதத்தைப் படித்ததும் நித்யா நெருப்பின்மீது புழுவெனத் துடித்தாள். 15 ரூபாய் அனுப்புவதாகச் சொல்லிவிட்டு பத்து ரூபாய்தான் அனுப்பும் ரகஸ்யம் அவளுக்குத் தெரியவே தெரியாது. தன்மீது உயிராயிருக்கும் தகப்பனாரைப் பார்க்கவும் மனம் பதறியது. இச்சமயம் எப்படி உதவி செய்வதென்று மனது தத்தளித்தது. தனக்கென சொந்தமான நகைகளில் ஒன்றைக் கழட்டிவிற்றுக் கொடுக்கலாமாவென்றுகூடத் தோன்றியது.

ஆனால்...'ஒன்றுமே செய்யாதிருக்கும்போது நான் திருடிக் கொடுப்பதான பெயர் வந்திருக்கையில் இந்த காரியம் செய்வது சுத்தபிசகு' என்ற நீதி அவள் மனத்திலேயே உதயமாகியது. "எனக்கென்று சொந்தமாவது? நான் அவருடைய அடிமைதானே... ஸ்திரீகளுக்கு எந்த அம்சத்தில்தான் சுதந்திரம் உண்டு. அவருடைய சொத்தை நான் அவருக்குத் தெரியாது இம்மாதிரி செய்வது தப்பிதத்திலும் தப்பிதமல்லவா!" என்று அவள் மனத்திலேயே ஏதோ ஒன்று சொல்லியதால் அவள் ஒரு வழியிலும் செல்லமுடியாது சோகப் பதுமைபோல் படுத்திருந்தாள். அன்று சாப்பாட்டிற்கு அவள் செல்லவில்லை என்பதை அறிந்தும் பிரண்டை. பாட்டி அவளைச் சாப்பிடக் கூப்பிடவேயில்லை.

தன்னை ஈன்றெடுத்த தாய்தந்தையர்கள் ஒருவேளைச் சாப்பாட்டிற்குக்கூட வழியின்றித் திண்டாடுகையில் தான்மட்டும் பலவிதகாய் கறி வகைகளுடன் சாப்பிடுவதா என்று அவள் மனம் தவித்தது. சமையல்காரன்மட்டும் இரண்டு தடவை கூப்பிட்டதற்கு தனக்கு உடம்பு சரியில்லை என்று அவர்களைச் சாப்பிடும்படிக்கு கூறினாள்.

சாயங்காலம் ஸுதா பள்ளிக்கூடத்திலிருந்து வந்தவுடனே வழக்கம்போல் டிப்பன் சாப்பிடச் சென்றாள். "மாமா சாப்பிட்டாயிற்றா! அம்மா சாப்பிட்டாயிற்றா!" என்று கேட்டாள். "இருவரும் இன்று சாப்பிடக்கூட இல்லை. எத்தனைதரம் கூப்பிட்டும் வரவில்லை. உடம்பு சரியில்லையோ அல்லது யாதவனாவது, பாட்டியாவது ஏதேனும் கலாட்டா செய்தார்களோ தெரியவில்லை" என்று சமையல்காரன் சொல்லியதை யாதவ் கேட்டுக்கொண்டே வந்துவிட்டான்.

"சமையல்காரக் கழுதைக்கு இத்தனை வாயா! கூலிக்கு வேலை செய்வதாகத் தோன்றவில்லையா! நாங்களா கலாட்டா செய்திருப்போம். பத்திரம். நாக்கை உள்ளடக்கிப் பேசு. கன்னம் புளித்துவிடும்" என்று நாய்போல் சீறியதோடு, ஸுதாவையும் விழுங்கிவிடுபவன்போல் பார்த்து 'சீச்சீ! நாயே! எந்த தடியன் தின்றால் உனக்கென்ன! எந்த கழுதை எப்படிப்போனால் உனக்கென்னடீ! நீ என்ன பெரிய மனுஷிபோல் விசாரிப்பது?" என்று கூறியபடியே முதுகில் ஓங்கி அறைந்தான்.

சமயல்காரன், தன்னைக்கழுதை என்று திட்டியது ரோஷம் பொறுக்காது, 'டேய்! மரியாதையாப் பேசாவிட்டால் இந்தக் கழுதை என்ன செய்யும் தெரியுமா! முன்காலாலும் பின்காலாலும் நன்றாகவாங்கும்' என்று கூறிமுடிக்குமுன் யாதவ் "உம்...வாங்குமாடா! நாயே! வாங்குமா!" என்று கூறியபடியே சமையல்காரனின் கன்னத்தில் பளார் என்று அறைந்தான்.

சமையல்காரனும் பதிலுக்கு ஆத்திரத்தால் யாதவனை அடித்துவிட்டான். எதிரிலிருக்கும் ஸுதா "ஐயையோ! அம்மா! இங்கு வாயேன்" என்று கத்தினாள். நித்யா இக் கூச்சலைக் கேட்டு ஓட்டமாக வந்து இந்த யுத்தத்தைக் கண்டு கதிகலங்கிப்போய் "ஹா! ஹா! யாதவ்!...இதென்ன முட்டாள்தனம்!...விடு...விடு...கங்காதரா! உம்....விலகு, மரியாதை மட்டு ஒன்றுமில்லை? யாதவ்! நீ முதலாளி என்றதனாலேயே ஒரு சமையல்காரனை வாய்க்குவந்தவாறு திட்டுவதாவது? சேச்சே!...இது சற்றும்நன்றாயில்லை. உம்....வா வெளியே"... என்று கூறியவாறு யாதவனின் கையைப்பிடித்து இழுத்து வெளியே நிறுத்தினாள்.

சமையல்காரனையும் கண்டித்து அடக்கி, "கங்காதரா! நீயும் இம்மாதிரி செய்தது அழகல்ல. அவன் குணந்தான் தெரிந்திருக்கிறதே. இதெல்லாம் எஜமானர்வரையில் எட்டினால் என்னவாகும். பேசாமல் உன் வேலையைப் பாரப்பா! அவன் ரெண்டாங்கெட்டான் பையன்; இனி அவனுடன் வாய்கொடுக்காதே. நீ வேலையைவிட்டும் போகக்கூடாது. உன்னைப்போன்ற உத்தமன் எவனும் கிடைக்கமாட்டான். நீ உன் எஜமானருக்காகவும் எனக்காகவும் பேசாமல் போ" என்று அடக்கிவிட்டு,

"யாதவ்! என்னை வீணாய் முறைத்துப்பார்த்து பிரயோஜனமில்லை. வேலைக்காரனிடம் நீ அன்பாயிராவிடில் பகவான் உன்னிடம் அன்பாயிருக்கமாட்டார். பத்திரம். இனிமேல் இப்படிச் செய்யாதே. நீ என்ன ஒட்டுக்குழந்தையா! உன் க்ஷேமத்திற்காக நான் உனக்கு புத்திசொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். என்மீது கோபித்துக் கொண்டாலும் சரி. இம்மாதிரி உண்மையான சமையல்காரன் அகப்படவேமாட்டான். இதாஇதம் தெரியாதுப் பதறுதே. போ! உன் வேலையைக் கவனிக்கப்போ. இம்மாதிரி தினம் சண்டையிடுவதும் நான் மத்யஸ்தம் செய்வதும் வெகு அழகு" என்று அனுப்பி விட்டு மீண்டும் உள்ளே சென்று படுத்தாள்.

ஸுதா நித்யாவின் பக்கத்தில் உட்கார்ந்து அவளை அணைத்துக் கொண்டே "அம்மா! நீயும் மாமாவும் இன்று சாப்பிடவே இல்லையாமே! ஏம்மா! என்ன விஷயம் சொல்லும்மா!' என்று கேட்டாள்.

நித்யா:—ஸுதா! இந்த சமயம்மட்டும் என்னைத் தொந்திரவு செய்யாதே! ஒரு விஷயமும் இல்லை. கண்ணா! நீ போய் விளையாடம்மா! எனக்குத் தலைவலி அதிகமாயிருக்கிறது. பேசக்கூட முடியவில்லை. என்மேல் கோவிக்காதேடா ராஜா!" என்று அன்பு ததும்பக்கூறி அவளை அணைத்து முத்தமிட்டு அனுப்பினாள்.

மகா புத்திசாலியாகிய ஸுதா அதற்குமேல் எதுவும் சொல்ல முடியாது எழுந்து வெளியேவந்தாள். ஸுதாவின் வயதுக்குமேலான தேக வளர்ச்சியும், யௌவனத்தின் வசீகர சோபையும் அவளை ஸ்வீகரித்துக்கொண்டன. ஸுதாவின் அழகைக் கண்டு நித்யாவின் உள்ளம் பூரித்து அப்படியே தேன் குடித்த வண்டுபோல் சுழலும்.

தினம் தினம் அண்ணன் யாரிடமாவது சண்டையிடுவதும் அம்மா வந்து தடுப்பதும் இதே பெரிய தலைவேதனையாகிவிட்டதே என்று ஸுதாவும் வருந்தியவாறு முன்பக்கத்து வராண்டாவிற்கு வந்தாள். யாதவ் அசல் சோதாக்கள் நாலுபேருடன் தோள்மீது கையைப் போட்டுக்கொண்டு வீதியில் நடப்பதைக் கண்டு சிறுமியாயினும் வெறுப்புகொண்டு "இந்த அண்ணனுக்கு எப்போது நல்லபுத்தி வரும்?" என்று ஏங்கினாள்.

19

183056

அந்திநேரம் எங்கும் பக்ஷிகள் ஆனந்தமாயப் பாடிக்கொண்டு தம் தம் கூடுகளை நாடிப் பறந்தன. ஹரிஹரன் ஆபீஸிலிருந்து வரும்போதே கூட இரண்டு சிநேகிதர்களுடன் வந்ததால் வீட்டில்தங்காமல் உடைமாற்றிக்கொண்டு, வந்தவர்களுடன் டிப்பன் சாப்பிட்டுவிட்டு வெளியே போய்விட்டான். நித்யாவைப் பார்க்கவும் இல்லை. விஷயத்தை அறியவுமில்லை.

தகப்பனுர் வந்தால் விஷயம் தெரியும் என்று நினைத்திருந்த ஸுதாவுக்கு ஏமாற்றமாகிவிட்டது. இருப்பினும் அவள் மனங் கேட்காது தவித்தது. நேரே மெத்தைக்குச் சென்ருள். தாமோ தரன் தன்னறையில் ஒலேப்பாயின்மீது குப்புறவே படுத்திருந்தான்.

அதைக்கண்டதும் ஸுதாவுக்கு என்றுமில்லாத ஒரு பரிதாபம், மனத்தில் ஒருவிதமான உணர்ச்சி, 'திக்கு திக்கு' என்று அடித்துக் கொள்ளும் வேகம் எல்லாம் ஒன்றுகூடிய விநோதத்தை அவளா லேயே கூறமுடியாது திகைத்தாள். "இன்று காலேயில்கூட பாடம் கற்றுக்கொடுத்த தாமோதரனேக் கண்டபோது இத்தனே வேகங்கள் திடீரென்று தோன்றினவே ஏன்?" என்று அவள் மனத்தை அவளே கேட்டுக்கொள்கிருள். அவளுக்கே விளங்கவில்லே.

சில விநாடிகள் மௌனமாக நின்ருள். பிறகு ஒருவாறு சமாளித்துக்கொண்டு, "மாமா!' என்று யாழினும் இனிய த்வனியில் கூப்பிட்டாள். ஏதோ மந்திரத்தில் கட்டுண்டு மயங்கிக் கிடப்பவன் போல் செயலற்றுப் படுத்திருந்த தாமோதரன் தன்னேக் கூப்பிட்ட உடனே தலேயை நிமிர்ந்துப் பார்த்தான். ஆனுல், பதில் பேசவில்லே.

அவன் கண்ணீர் ஊற்றில் தலேயணே அப்படியே தெப்பம்போல் நனேந்திருந்ததையும் கண்களில் ஜலம் அப்போதும் பெருகிக் கொண்டிருந்ததையுங் கண்ட ஸுதாவின் மனம் பதறியது. "மாமா! ஏன் நீங்கள் இப்படியிருக்கிறீர்கள்? காலேமுதல் சாப்பிடவே இல்லேயாமே! அம்மாவும் சாப்பிடவில்லேயாம். என்ன சமாச்சாரம்?" என்று ஆழ்ந்த அன்புடன் கேட்டாள்.

தாமோதரனுல் பேசவே முடியவில்லே. தலே நிமிர்ந்து பார்த் தான். மீண்டும் கவிழ்ந்துகொண்டான். அவன் தலே நிமிர்ந்து பார்த்த பார்வையின் பரிதாபத்தை ஸுதாவினுல் சகிக்கவே முடிய வில்லே. இதுகாறும் இல்லாத ஒரு நூதன சக்தியையும் ப்ரகாசத்தை யும் அவன் கண்களில் கண்ட ஸுதாவின் இதயத்தில் பளீர் என்று ஒரு க்ஷணப்பொழுதில் மின்வெட்டு வெட்டுவதுபோன்ற உணர்ச்சி உண்டாகி அவளேத் தாக்கி மயிர்கூச்செறியச்செய்தது.

சில விநாடிகள் ப்ரமை பிடித்தவள்போல் நின்ருள். மீண்டும் அவளால் நிற்க முடியாது தேகம் துவண்டு ஆடி அவளே யறியாது கால்கள் விலவிலவென்று உதறின. வெயர்வை வெள்ளம் குபீ ரென்று பொங்கி வழிய அப்படியும் இப்படியும் தள்ளாடித் தவித் தாள். "என்றுமில்லாத இத்தகைய வேதனேகள் ஏன் இப்பொழுது உண்டாகின்றன. இது எந்த அனுபவத்திற்கோ தெரியவில்லேயே! இந்த மாறுதலின் காரணம் யாதோ! இதை யறியக்கூட முடிய வில்லேயே! ஹா!....ஏன் இப்படி ஒரு பெருமூச்சு?...சீச்சீ!...இனி இங்கு நிற்கக்கூடாது...ஏதேதோ தோன்றுகிறது" என்று நினேத்து பயந்தபடியே தடதடவென்று வெளியே வந்தாள்.

சில்லென்ற காற்று பட்டதும் தேகமே விடுவிடு என்று ஆடியது. கைகளால் தலையை அழுத்திக்கொண்டாள். ஒரு நிமிஷம்வெளியிலுள்ள நாற்காலியில் உட்கார்ந்தாள். மனது அப்போதும் சமாதானமாகவில்லை. உள்ளேபோய் தாமோதரனைப் பார்த்து எழுப்ப வேண்டுமென்றே தூண்டுகிறது. மார்பு படபடவென்று அடித்துக் கொள்ளும் வேகத்தையும் தடுக்கமுடியவில்லை. தத்தளித்தவாறு மீண்டும் உள்ளே சென்று எட்டிப் பார்த்தாள்.

மனக் குழப்பம் வினாடிக்கு வினாடி அதிகரித்ததால் 'சீ!....கீழே போய்விடுவோம்'...என்று துணிந்து வெளியே போகப்போனாள். அப்போது தற்செயலாக நிமிர்ந்து பார்த்த தாமோதரன் சகிக்கமுடியாத வேதனையுடன் ஒரு வினாடி ஸுதாவின் ஸௌந்தர்யவதனத்தை உற்று நோக்கினான். அவளும் சஞ்சலத்துடன் போவதையறிந்து மெல்ல ஹீனஸ்வரத்தில் "ஸுதா! போகிறாயா?" என்று ஒரே வார்த்தை கேட்டான்.

இதைக் கேட்ட ஸுதாவுக்கு ஏற்கெனவே அடித்துக்கொள்ளும் நெஞ்சு பின்னும் ஆயிரம் பங்கு அதிகமாக அடிக்கத்தொடங்கி அவளைத் திக்குமுக்காடச் செய்ததால் என்ன பதில் சொல்வதென்றே தெரியாமல் ஊமைபோல் விழித்தாள். மனத்திற்குள் போராட்டம் எப்படியிருப்பினும் நான்கு விழிகளும் ஒன்றையொன்று விழுங்கி ஏப்பம் விடுவதுபோல் சுழன்றுச் சுழன்று பார்த்து பெரிய யுத்தம் செய்வதை அவர்களால் தடைகட்டவே முடியவில்லை.

பித்து கொண்டவள்போல் பதிலே பேசாமல் "மாமா!....நான்... போ...கிறேன்"...என்றுகூறிக்கொண்டே தடதடவென்றுஇறங்கிக் கீழே வந்தாள். அவளை திடீரென்று யாரேனும் பார்த்தால் ஏதோ திருடிவிட்டாளோ! அல்லது மூளை கலங்கிவிட்டதோ! என்று கட்டாயம் சந்தேகிப்பார்கள்.உள்ளேவந்து பார்த்தால் நித்யாவும் அதே நிலையில் இருக்கக்கண்டு இங்கும் சமாதானமாகாது தவித்தவாறு ரேடியோவிடம் சென்று அதைத்திருப்பினாள். அதிலும் மனம் செல்லவில்லை.அதைக்கேட்கவும் மனமில்லாது மூடவும் மனமில்லாது உட்கார்ந்திருந்தாள்.

அச்சமயம் சமையல்கார கங்காதரன் அங்குவந்து"ஸுதா! இன்று காலை முதல் உன் மாமாவும் அம்மாவும் தண்ணீர்கூடக் குடிக்காதது எனக்கு மிகவும் வருத்தமாகவிருக்கிறது. இப்படி பட்டபட்டினியாகவிருந்தால் உயிர் நிற்குமா! நீ எப்படியாவது அவர்களைச் சாப்பிடும்படிச் செய்தால்தான் நல்லது. இல்லையேல் அவர்கள் துடிக்கத் துடிக்கப் படுப்பதும் நாம் வயிறு புடைக்கத் தின்பதும் நன்றாயில்லை. இதற்கு நீதான் வழி செய்யவேண்டும். என்ன பாட்டு வேண்டியிருக்கு? இந்தா! இந்த காப்பியை தாமோதரனுக்குக் கொடுத்து விட்டுவா.,,நான் பத்து தரம் போனேன். அவன் மறுத்துவிட்டான்,

'அவனை என்ன வேண்டுவது?" என்று கிழவி என் ப்ராணனை வாங்கு கிறாள். இப்போது அவள் இல்லை. நீ போம்மா...குழந்தாய்! எழுந் திரு" என்று வெகு சகஜமாகக் கூறினான்.

ஸுதா பிறப்பதற்குமுன்னாலிருந்து வேலை செய்யும் சமையல் காரன் இவன் ஒருவனேயாகையால் அவனுக்கு ஸுதாவிடம் அத் தனை ப்ரீதியும் சுதந்திரமும் நிறைந்திருந்தன. மனத்தில் புதியவித மான போராட்டத்துடன் இறங்கி வந்த தன்னை மீண்டும் அனுப்பு வதற்கு என்ன பதில் சொல்வதென்று தெரியாது விழித்தாள். தானே கொண்டு கொடுக்கலாமா! என்றும் ஒருநிமிடம் துணிந் தாள். ஆனால் மனத்தில் திக்குதிக்கென்று ஒருவிதமான பீதியும் திகிலும் அடித்துக்கொண்டதால் கால்கள் பின்வாங்கின.

"கங்காதரா! நீயே கொண்டு கொடுத்துவிடு. எனக்கு ஏதோ பயமாயிருக்கிறது" என்று தன்னையறியாது கூறினாள். 'ஒருவேளை வீட்டில் ஏதாவது விபரீத சண்டை நடந்து அதனால் தாமோதரன் கோபித்திருக்கிறானே!' என்று ஸுதா பயந்துவிட்டதாய் கங்கா தரன் நினைத்ததால் "சரி...ஸுதா! நீயும் வா...நானும் வருகிறேன். காப்பியை நீ கொடுத்தால் கட்டாயம் குடிப்பான். ஐயோ பாவம்! இன்று பட்டினியாய் காலேஜிக்குப் போய் வந்து அப்படியே படுத்திருக்கிறான். எழுந்திரு" என்றான்.

அதற்குமேலும் வாதாடினால் தன்மீது ஏதாவது சந்தேகம் தோன்றிவிடுமோ என்று பயந்த ஸுதா, கங்காதரனுடன் மாடிக் குச் சென்றாள். வாசற்பக்கத்துப் படிக்கட்டு வழியாய் தாமோ தரன் இறங்கிச் செல்வதை இருவரும் பார்த்து ஏமாற்றமடைந்து திரும்பினார்கள்.

"நான் அப்பவே போகச் சொன்னேனே கேட்டாயா! அவன் மகா மானி. எங்கேயோ போய்விட்டான். உம். இதை அம்மாவுக் காவது கொடுத்துக் குடிக்கச் சொல்லு. இந்த வீட்டுச் சண்டையை விலக்கி விலக்கி மத்தியஸ்தம் செய்வதற்கே அம்மாவின் பாடு போதும்போலாகிவிடுகிறது. இன்று நடந்த சம்பவத்திற்கு மகா லக்ஷ்மிபோன்ற அந்தம்மாளின் முகத்திற்காக நான் நின்றேனே யன்றி வேறு இந்திரன் சந்திரன் வந்து சொல்லியிருந்தால்கூட நான் நிக்கமாட்டேன். பாவம். என் வயிற்றில் பிறந்த பெண்போல் ஒரு பாசம் எனக்கு உண்டாகியது. பச்சைக் குழந்தை இந்த கிழ வனைக் கட்டிக்கொண்டு வாரிக்கொண்ட சுகம் இதுதான். இத்தனை சிறிய வயதில் அவர்களுக்குள்ள வைராக்யமும் உத்தம குணமும் பார்ப்போரைப் பரவசமுறுத்துகிறது. உன் தாயாரின் குணங்கூட இத்தனை உயர்ந்ததாயிருக்க முடியாது" என்று அவன் அடுக்கிக் கொண்டே போனான்.

இதைக் கேட்கக் கேட்க ஸுதாவின் கண்களில் பலபல வென்று நீர் உதிர்ந்தது. காப்பியுடன் சரேலென்று உள்ளே

போனுள். அப்போது விளக்கேற்றும் நேரமாதலால் நித்யா ஸ்வாமிக்கு விளக்கேற்றியவாறு லக்ஷ்மி தோத்திரம் பாடிக்கொண்டிருந்தாள்.

ஸுதாவும் தினம் நித்யாவுடன் விளக்கேற்றிப் பாடும் வழக்கத்தை இன்று மனத்திலுள்ள நாதன வேகத்தினுல் மறந்தே போனுள். காப்பியைக் கீழே வைத்துவிட்டு நமஸ்காரம் செய்து பின் தானும் லக்ஷ்மி தோத்திரம் பாடவாரம்பித்தாள். இருவரும் பாடி முடித்து கற்பூராரத்தி செய்து பழமும் பாலும் ஸ்வாமிக்கு நிவேதனம் செய்துப்பின் அந்த பழம், குங்குமம், மஞ்சள், கற்பூரம் முதலியவைகளுடன் பின்பக்கத்துக் கொட்டிலுக்குச் சென்று அங்குள்ள இரண்டு அழகிய பசுக்களுக்கு மஞ்சள் குங்குமம் இட்டு பூஜையும் கற்பூராரத்தியும் செய்து பழத்தைத் தின்பதற்குக் கொடுத்துப் பிரதக்ஷண நமஸ்காரம் செய்துவிட்டு உள்ளே வந்தார்கள்.

நித்யாவின் முகத்தைப் பார்க்கவே முடியவில்லை. ஸுதா நித்யாவை வணக்கமும் விசனமும் தேங்கிய பார்வையுடன் "அம்மா! நீயும் மாமாவும் இப்படி பட்டினியாகக் கிடந்தால் என்ன செய்வது? எனக்கு மட்டும் சாப்பாடு பிடிக்குமா! நானும் சாப்பிடப் போவதில்லை. தம்பி, தங்கச்சி அவர்களுக்கும் போடப்போவதில்லை. எல்லோருமே பட்டினிகிடப்போம்" என்றுள்.

இதைக்கேட்ட நித்யா கண்ணீர் பெருகியவாறு கலகலவென்று ஒரு சோகச் சிரிப்பு சிரித்தாள். "ஸுதா! நான் சாப்பிடவில்லை என்றுதானே நீயும் சாப்பிடமாட்டேன் என்கிருய். அதேபோல் எங்கப்பாவும் அம்மாவும், அதிலும் இரண்டு கண்ணும் தெரியாத அந்தகர் பட்டினியாய்க் கிடக்கும்போது நாங்கள் மட்டும் எப்படியடா கண்ணு சாப்பிடமுடியும்?" என்று கூறுவதைக் கேட்டதும் ஸுதா தீயை மிதித்தவள்போல் துள்ளினுள். "என்ன! என்ன! தாதாவும் பாட்டியும் பட்டினியாயிருக்கிருர்களா! ஏன்...யார் சொன்னது?"...என்று பதறியவாறு கேட்டாள்.

நித்:—யார் சொல்லவேண்டும்? இதோ இக் கடிதம் சொல்லிற்று'—என்றுள். உடனே ஸுதா கடிதத்தைத் தானே எடுத்துப் படித்துப் பார்த்துத் திடுக்கிட்டாள். 'அம்மா! இதென்ன அக்ரமம்? கட்டாயம் இந்த சதி செய்வது அண்ணனும், பாட்டியுந்தான் என்பதில் சந்தேகமே இல்லை. அப்பா ஒவ்வொரு மாதத்திலும் 15 ரூபாய்களை அண்ணனிடம் கொடுக்கும்போது வேண்டுமென்று நான் கவனித்து வருகிறேன். அவன் 5 ரூபாய்களை எடுத்துக் கொள்வதோடு சரியாக அனுப்பாமல் வேண்டுமென்று சதி செய்கிருன். இரு; இரு. அப்பாவிடம் நானே இதைக் காட்டிவிடுகிறேன்' என்று கடிதத்துடன் ஓடினுள்.

சமயத்திற்குச் சரியாக ஹரிஹரன் ஹாலில் தனியாக பத்திரிகை படித்துக்கொண்டிருந்தான். என்றுமில்லாத தைரியமும், ஆவேச

மும் கொண்டு தந்தையின் எதிரில் சென்று 'அப்பா! இந்த வீட்டில் நடக்கும் அக்ரமங்களை நீங்கள்கூட கவனிக்காவிட்டால் வேறு யார் கவனிப்பார்கள்?' என்று பெரிய அதிகாரத்துடன் ஆரம்பித்தாள்.

அவன் வியப்பும், திகைப்பும் கொண்டவனாய், 'என்னம்மா சமாச்சாரம்...ஏதேதோ சொல்லுகிறாயே! என்ன அக்கிரமம் நடந்தது? சொல்லு' என்று கேட்டான்.

ஸுதா:—என்னப்பா! ஒன்றுமே தெரியாதுபோல் கேட்கிறீர்கள். இன்று காலைமுதல் அம்மாவும், மாமாவும் தண்ணீர்கூட குடிக்கவில்லையே! ஏன் என்று நீங்களாவது, பாட்டியாவது கேட்டீர்களா! அவர்கள் வதையவதையப் பட்டினியாயிருப்பது தகுமா?- என்று கூறும்போது கோபத்தால் கண்கள் சிவந்தன.

ஹரி:—என்ன! என்ன! இரண்டு பேரும் பட்டினியாயிருக்கிறார்களா! ஏன் எதற்காக?

ஸுதா:—எதற்காகவா! இதோ! இதற்காக—என்று கூறி கடிதத்தைக் கையில் கொடுத்தாள். ஹரிஹரன் கடிதத்தைப் படித்துப் பார்த்ததும், உண்மையில் திடுக்கிட்டுப்போய் "என்ன...10 ரூபாய் தான் வருகிறதா?...இதென்ன வேடிக்கை! ஐயோ, பாவம்! பெற்றவர்களின் கஷ்டத்தைக் கேட்டுச் சாப்பிடப் பிடிக்கவில்லைபோலிருக்கிறது. அம்மா எங்கே?....மாமா எங்கே?" என்று கூறியவாறு எழுந்து உள்ளே வந்தான்.

நித்யா பதுமைபோல் உட்கார்ந்திருந்ததைக் கண்டு மனம் குழம்பியது....'ஸுதா! மாடிக்குச் சென்று மாமாவைக் கூப்பிடு' என்றான். உடனே ஸுதா ஓடினாள். "நித்யா!...இந்தமாதிரி அவமானமும், மனக்கஷ்டமும் வருமென்று நான் எதிர்பார்க்கவே இல்லை. இக்கடிதத்தைப் படிக்கும்போது எனக்கே பரிதாபமாய் இருக்கிறது. பாவம்! உனக்கெப்படி இருக்கும்? போனதுபோகட்டும். எப்படி எல்லாமோ எதிர்பார்க்காது நடந்துவிட்டது. நாம் இன்றே கிளம்பிப்போய் அவர்களை அழைத்துக்கொண்டு வந்துவிடலாம். முன்மாதிரி எதுவும் நடக்காதபடி நான் பார்த்துக்கொள்கிறேன். நீ பட்டினி கிடப்பது எனக்குப் பொறுக்கவில்லை. எழுந்து சாப்பிட்டுவிட்டு ரயிலுக்குப் போகலாம் வா" என்றான்.

நித்யாவால் பேசவேமுடியவில்லை. அவளை மீறி துக்கம் பொங்கி தேகம் குலுங்க அழுதாள். நித்யா இந்த வீட்டிற்கு வந்தபிறகு இம்மாதிரி நிலைமையில் அவளைக் காண்பது ஹரிஹரனுக்கு இதுவே முதல் தடவையாகுமாதலால் ஹரிஹரனின் மனது துடித்தது. நித்யாவின் தலையை நிமிர்த்திக் கண்களைத் துடைத்தவாறு "நித்யா! கலங்காதே...என் மகனும் என் தாயாருமே எனக்குச் சத்ருவாய் இருப்பதை யறிய என் இதயம் பதைக்கின்றது. நாம் போய் அவர்களை அழைத்து வந்துவிடலாம். மணி 8 கூட ஆகவில்லை. 9-க்குத்

தான் வண்டி...எழுந்திரு" என்று நயமாயும் அன்புடனும் கூப்பிட்டான்.

நித்:—மன்னிக்கவேண்டும். அவர்கள் இங்கு வரவே வேண்டாம். ஒருநாளைக்கு ஒரு ஆயிரந்தடவை, 'குருட்டுப்பிணம். தரித்திரப்பிணம், மூதேவிப் பீடை' என்கிற ஸஹஸ்ர நாமார்ச்சனையும் பெறவேண்டாம். அண்டறியாத பாபத்தைச் செய்து பிறந்த கட்டைகளுக்கு—திக்கும் வக்குமற்ற பரிதாப ஆத்மாக்களுக்கு—நீங்கள் பெரும் நிதியொன்றும் கொடுக்கவேண்டாம். உங்கள் இதய பூர்வமாய் ஒரு சிறிது தயாநிதியைக் கொடுத்து உதவினால் போதும். அவர்கள் என்னை நம்பி உயிர் வாழும் பேதைகள். நான் உங்களை நம்பி ஊசலாடும் அடிமை" என்றும் கூறும்போது மேலே பேசமுடியாது இதயத்தைப் பிறிக்கொண்டு துக்கம் வந்ததால் அப்படியே நிறுத்திக்கொண்டாள்.

ஹரிஹரனை யறியாது அவன் கண்களிலும் கண்ணீர் முத்துக்கள் சிந்தின. உடனே எழுந்துபோய் 50ரூபாய்களைக்கொண்டு வந்து நித்யாவிடம் கொடுத்து "நித்யா! இதோ இதை நீயே உன் கையாலேயே அவர்களுக்குக் கொடுத்துவிட்டுவரலாம் கிளம்பு. இனிமேல் மாதா மாதம் நானே பணத்தை நேரில் அனுப்புகிறேன். எழுந்திரு. போய் வரலாம்" என்றான்.

தகப்பனாரைப் பார்க்கவேண்டுமென்கிற ஆவல் ஒருபுறம் துடித்ததால் அவளை யறியாமலேயே போவதற்கும் இசைந்து எழுந்தாள். இருவரும் சாப்பிட்டானதும் தாமோதரனையும் அழைத்துக் கொண்டு உடனே வண்டிக்குக் கிளம்பினார்கள். பிரண்டை பாட்டியோ கோயிலில் திருநாளுக்குப்போனவள் இன்னும் வராததால் கங்காதரனிடமும் ஸூதாவிடமும் பாட்டிக்குச்சொல்லும்படியாகக் கூறிப்பின் ரயிலுக்குப் போனார்கள். ஸூதாவின் மனம் பூரித்த பூரிப்பில் கண்கள் மலர்ந்து ப்ரகாசித்தன. கங்காதரனுக்கு ஆனந்தத்தினால் கண்களில் நீர் முட்டியது.

20

இரவு ஒன்பதரை மணி இருக்கும். 'ஹரஹரா! சிவசிவா! சம்போ! மகாதேவா!' என்று பக்திப் பெருக்கால் நாம உச்சாரணத்துடன் பிரண்டைப் பாட்டி வீட்டிற்கு வந்தாள். தர்மராஜு, தர்மாம்பாள், ஸூதா மூவரும் படுத்துவிட்டார்கள். தத்தாறி யாதவ் அன்று வீட்டிற்கே வரவில்லை. வீடு நிச்சப்தமாகவிருந்தது. ஹரிஹரன் ரூம் விளக்குகூட இல்லாதிருந்ததுகண்டு "இதற்குள்ளாகவா தூங்கிவிட்டான்?" என்று தனக்குள் முணுமுணுத்தவாறு உள்ளேவந்தாள்.

பாட்டியம்மாள் எந்நேரம் சென்று வந்தாலும் அதுவரையில் நித்யா பட்டினியிருந்து கூடத்தான் சாப்பிடுவீது வழக்கமாதலால் அன்று நித்யாவின் சந்தடியும் இல்லாததால் "ஏண்டா, கங்காதரா! இதென்னடா வீடு சில்லென்றிருக்கிறது! எல்லாரும் சாப்பிட்டுத் தூங்கியாயிற்று என்ன!" என்றாள்.

என்றுமே பாட்டிக்கும் கங்காதரனுக்கும் எட்டாம் பொருத்தம். இன்று கிழவி கேட்டதும் "எல்லோரும் சாப்பிட்டாயிற்று. நான்கூட சாப்பிட்டுவிட்டு உங்களுக்குப் பலகாரம் வைத்திருக்கிறேன். பெரிய எஜமான், எஜமானியம்மாள், தாமோதரன் மூவரும் ஊருக்குப்போனார்கள். எஜமானியம்மாளின் தகப்பனாருக்கு உடம்பு சரியில்லை என்று காகிதம் வந்ததாம். உங்களிடம் சொல்லச் சொன்னார்கள்.யாதவன் வரவே இல்லை" என்று அலக்ஷியமாகச்சொன்னான்.

இதைக்கேட்ட பிறண்டை பாட்டிக்கு மிளகாயும் பிரண்டையும் சேர்த்தரைத்தாற்போல் பற்றிக்கொண்டது. "என்ன! ஊருக்குப்போனார்களா! ஐயோடீ! இதென்னடீ அக்ரமம்? அந்த குருட்டைத் தேடிக்கொண்டு எமன் வந்துவிடப்போகிறானே! அதற்கும் எனக்கும் சாவுகூட வருமான்னா! ஓகோகோ! பெருதனம் தலை தூக்கிவிட்டதுபோலிருக்கிறதே.சொல்லாமல் கொள்ளாமல் ஊருக்குப் போவதற்கும் தைரியம் வந்துவிட்டதா! சரிதான். இனிமேல் வீடு விடிந்தாற்போலத்தான்" என்று சரமாரியாகப் பொழிந்தாள். அவர்கள் எதிரிலிருந்தால் அப்படியே சபித்துக்கூட இருப்பாள். ஒருவரும் இல்லாத சமயம் என்ன ஆட்டம் ஆட முடியும். பலகாரம்கூடச் சாப்பிடவில்லை. வெகு நேரம் தூங்காது வசவு ஜபம் செய்துகொண்டிருந்தாள்.

மறுநாள் செல்ல மூன்றும் நாள் எல்லோரும் ஊரிலிருந்து வந்தார்கள். என்ன காரணத்திலோ ஹரிஹரன் தாயாருடன் பிடி கொடுத்துப் பேசவே இல்லை. அதோடு, வந்த அன்றே ஆபீஸ் வேலை விஷயமாய் வெளியூருக்கு க்யாம்பு போகவேண்டிய உத்திரவு வந்ததால் அன்றே ஊருக்கும் போய்விட்டான்.

நித்யாவைப் பார்த்ததும், "ஏண்டியம்மா! அப்பாவிடம் எமன் அணுகாதபடி ஓட்டிவிட்டாயா!" என்று துடுக்காக வெடுக்கென்று கேட்டாள். நித்யாவுக்கு இந்த சுடு வார்த்தை சுரீரென்று உறைத்தது. "எமனை விரட்டும் சக்திமட்டும் உங்களுக்கு இருந்திருக்குமாயின் உங்கள் தொழிலுக்குப் பேருதவியாயிருந்த உங்கள் இரண்டாவது நாட்டுப் பெண்ணிடம் அணுகவிடாது எமனையே வைத்திருப்பீர்கள். அதுதான் இல்லாதுபோயிற்று. ஆனால் என் தாயார் தன் பக்தியால் என் தந்தையிடம் எமனை அணுகவிடாமல் தடுத்து விட்டாள். என் தகப்பனார் நன்றாகக் குணமாகி வருகிறார்" என்று தன்னை மீறிய ஆவேசத்தில் ஒருநாளும் இல்லாத தைரியத்துடன் கூறினாள். அம்மாதிரி பேசியது அவளுக்கே வியப்பாகவிருந்த

தென்றல் பிரண்டைப் பாட்டியின் கோபம் எத்தனை உச்சத்தை எட்டியிருக்கும் என்று கூறவேண்டுமா!

தத்திக் குதித்துத் தாண்டவமாடி திருப் பாட்டுப்பாடி திருகத் திருக விழித்தாள். எப்படியோ மத்தியில் ஒருவிதமான அலங் கோலமும் இன்றி நாட்கள் சக்கரம் உருள்வதுபோல் உருண்டு கொண்டே போயிற்று. மாதங்களும் சில கடந்துவிட்டன. ஆனல் பிறண்டைப் பாட்டியின் அருமைப் பேரனுக்குமட்டும் கல்யாண மாகும் வழியே இல்லை. பிள்ளையார் கல்யாணந்தான் என்று ஊரார் பரிகஸிக்கவும் ஆரம்பித்தார்கள்.

ஒரு சிறிய ஆலம்விதை மாபெரும் விருக்ஷமாவதுபோல் ஸுதா வின் இதயத்தில் அவளை அறியாது ஊன்றிய ப்ரேமையின் விதை சிறுகச் சிறுக அந்தரங்கமாகவே வளரவாரம்பித்தது. அந்த புதிய மாறுதலின் விநோதம் ஸுதாவின் நடவடிக்கைகளில் சிறுசிறு மாறு தல்கள் உண்டாகியதைக் காண அவளுக்கே வியப்பாகவிருந்தது.

தாமோதரனிடம் முன்போல் தாராளமாகப் பாடங் கற்றுக் கொள்ளமுடியாது ஏதோ ஒருவிதமான சங்கோஜமும் திகிலும் உள்ளுக்குள்ளேயே வாட்டியதால் பொம்மைபோல் பாடம் கற்றுக் கொள்வதும் பேசாமல் எழுந்து வந்துவிடுவதுமாக வாரம்பித்தாள். பாடங்களில் தோன்றும் சந்தேகங்களைக்கூடக் கேட்பதில்லை.

இந்த மாறுதலை யறிந்த தாமோதரன் ஒரு தினம் "ஸுதா! நான் சொல்லிக்கொடுப்பது உனக்குச் சில தினங்களாகப் பிடிக்க வில்லை என்று தோன்றுகிறது. அப்படித்தானே! ஒளிக்காது சொல்லு" என்றான்.

இம்மாதிரி கேட்பான் என்று அவள் கனவில்கூட நினைக்க வில்லையாதலால் இதற்குப் பதில் கூறமுடியாமல் சில விநாடிகள் தியங்கினள். ஏதோ சொல்லவேண்டுமென்று வாயெடுக்கிருள். ஆனல் வார்த்தைகள் தொண்டைக்குள்ளேயே சிக்கிக்கொண்டு வெளிவராது தடைபட்டன. அவன் முகத்தை இமைகொட்டாது சில விநாடிகள் பார்த்தாள். பிறகு தானகவே தலை கவிழ்ந்துகொண்டது.

பாம்பின் காதை பாம்புதானே அறியமுடியும்? தாமோதரனின் சரீரம் முற்றும் ஒரு க்ஷணம் கிடுகிடென்று ஆடியது. உஸ்ஸ்ஸ் என்ற பெருமூச்சுடன் தலைகுனிந்துகொண்டான். மீண்டும்தலை நிமிர்ந்தான். பின்னும் குனிந்தான். பித்தன்போல் தவிக்கும் நிலைமையில் இருவருக் கும் மத்தியில் ஒரே மௌனமும் நிச்சப்தமும் குடிகொண்டன.

அச்சமயம் இவர்களுடைய நிஷ்டையைக் கலைக்கவோ அன்றி உள்ளுக்குள் வதைக்கும் உணர்ச்சியைப் பெருக்கிச் சோதிக்கவோ கீழே இத்தனை நாழி மூடியிருந்த ரேடியோவில் ஒரு உன்னத காயகி தன் இனிமையான சாரீரத்தில்கேட்போரின் இதயத்தில்ஆனந்தமும் களிவெறியும் சுறக்கும்படி ஜீவகளை ததும்பிநிற்கும் பாரதியாரின் கவிகளில் கீழ்வரும் பாடலை ராகமாலிகையாகப் பாடவாரம்பித்தாள்.

தூண்டிற் புழுவினைப்போல்—வெளியே சுடர் விளக்கினைப் போல்,
நீண்ட பொழுதாக—எனது நெஞ்சம் துடித்த தடீ
கூண்டுக் கிளியினைப் போல்—தனிமை கொண்டு மிகவு நொந்தேன்;
வேண்டும் பொருளை யெல்லாம்—மனது வெறுத்து விட்டதடீ.

பாயின் மிசை நானும்—தனியே படுத் திருக்கையிலே,
தாயினைக் கண்டாலும்,—ஸகியே, சலிப்பு வந்ததடீ
வாயினில் வந்த தெல்லாம்,—ஸகியே, வளர்த்துப் பேசிடுவீர் ;
நோயினைப் போலஞ்சினேன்,—ஸகியே, நுங்க ளுறவை யெல்லாம்.

உணவு செல்லவில்லை;—ஸகியே, உறக்கங் கொள்ளவில்லை
மணம் விரும்பவில்லை;—ஸகியே, மலர் பிடிக்கவில்லை;
குண முறுதி யில்லை;—எதிலும் குழப்பம் வந்ததடீ;
கணமு முள்ளத்திலே—சுகமே காணக் கிடைத்ததில்லை.

இவ்விருவருக்கும் மத்தியில் ஏற்கெனவே இருந்த மௌனமும் குழப்பமும் இன்னும் உள்ளக்கிளர்ச்சியுடன் பன்மடங்காகப் பெருகின. ஒருவரையொருவர் அடிக்கடி பார்க்கிறார்களேயன்றி வாயடைத்துப் போயிற்று. பாட்டும் முடிந்தது. இவர்களுடைய மௌனமும் சிறுகச் சிறுக குலையவாரம்பித்து உஸ் உஸ் என்ற பெருமூச்சின் சப்தம் அவ்வறையில் சூழ்ந்து எதிரொலியுடன் ரீங்காரம் செய்தது.

தாமோ:—ஸுதா! இப்பாடலில் பொதிந்துகிடக்கும் உணர்ச்சி மிக்க பொருளின் தத்துவம் உண்மைதானே !

பதிலில்லை. ஆனால் கண்களின் வீச்சுமட்டும் குறையவில்லை.

தாமோ:—ஸுதா ! ஏனிந்த மௌனம்! அணைகடந்து செல்லும் அன்பின் வெள்ளத்தின் வேகத்தைத் தடுக்கவோ, மாற்றவோ, மறைக்கவோ முடியுமா! இன்று மட்டுமல்ல. சில தினங்களுக்கு முன்பே நான் அறிவேன்...ஸுதா ! இதோ பார்...நான் ஊகிப்பது சரிதானே !...ஸுதா! சொல்லு...சொல்லு...உன் முத்தான வாய் திறந்து யாழ்போன்ற இனிய த்வனியில் சொல்லு—என்று கூறும் போது அவன் இதயக்கோட்டைக்குள் புதைந்துகிடந்த அன்பையும் ஆவலையும் தெட்டென எடுத்துக் காட்டியது.

ஸுதா தைரியமாகத் தலை நிமிர்ந்து பார்த்தாள். அவள் கண்களில் ஜ்வலித்த ப்ரகாசத்தின் சாந்தியும், ஆழமான நம்பிக்கையின் சோபையும், தாமோதரனை ஒரு குலுக்கு குலுக்கியது. "மாமா! நீங்கள் ஊகிப்பதற்கு என்னிடம் புதிதாக என்ன இருக்கிறது? உங்கள் அனுபவத்தையே நேராக எடுத்துக் கூறலாமே...நீங்கள் என்னை அறிந்ததுபோல் நானும் தங்களை அறிவேன் என்பதை உங்கள் இதயம் உணர்ந்திருக்கிறது. இதை யறிந்துதான் நான்...

தாமோ:—(இடைமறுத்து) அறிந்துதான் நீ என்னை சோதித்தாயோ !...ஸுதா!...இது தெய்வீகமாக உண்டாகும் ப்ரேமையா

யினும் என்வரையில் முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்படுவது போலல்லவா இருக்கிறது? இது வீண் மனப்பால் குடிப்பதுபோ லல்லவா முடியும்? நினைக்க நினைக்க எனக்கே பயமாயும் ஒருவித மான திகிலாயுமிருக்கிறது...

ஸுதா:—மாமா! நீங்கள் இப்படியெல்லாம் மனத்தில் நினைத் துக் கலங்குவதும் எனக்குத் தெரியும். இதை என்னிடம் சொல்லு வீர்களென்றும் நான் எதிர்பார்த்ததுதான்.

தாமோ:—நிஜமாகவா! ஸுதா! பெண்களே சமயசஞ்சீவிகள் சமயத்திற்குத் தக்கபடி பொருத்தமாகப் பேசும் திறமையும், அதை ஜெயிக்கும் சக்தியும் உண்டு என்பது உலக ப்ரஸித்தம். அதுபோலவே

ஸுதா:—என்ன மாமா! ஏதோ குழந்தைகளைப் பரிகஸிப்பது போல் செய்கிறீர்கள். பெண்கள் அப்படி பொய் சொல்லி அதை உண்மை என்று சாதிப்பவர்களல்ல...உங்களுடைய தினசரிக்குறிப்பு டயரி பொய்யானதா! நிஜமானதா!...

தாமோ:—ஐயையோ! ஸுதா! அதை நீ எப்போதுபார்த்தாய்?...

ஸுதா:—எப்போதா! பசியோடு இருக்கும் எவரும் எங்கு ஆகாரம் கிடைக்கும் என்று ஆராய்வது சகஜந்தானே. அதேபோல் சங்கீதப் பித்து பிடித்தவர்கள் "எந்த நல்ல சங்கீதம் எங்கு கிடைக்கும்? யாரி டம் கற்கலாம்" என்று அலைவார்கள். எந்த தொழிலில் யாருக்கு ஆர்வமோ அதைத் தேடி அவர்கள் அலைவது எத்தனை சகஜமோ அப் படித்தானே எல்லாம். இந்தவீட்டின் நிலைமைதெரிந்திருந்தும் நீங்கள் அந்த டயரியில் அசட்டுத்தனமாக உங்கள் மனம்போனபடி எழுத லாமா! எழுதியதை இம்மாதிரி திறந்த இடத்தில் சட்டைப் பையில் வைக்கலாமா! எங்க அண்ணன்தான் "எந்த சமயம் எது அகப் படும்" என்று மாமிஸத்துண்டுக்கலையும் கழுகைப்போல் காத்துக் கொண்டிருக்கிறனே! அவன் கண்ணில் பட்டுவிட்டால்...

தாமோ:—(உடல் பதற.) ஸுதா!...ஸுதா!......யாரேனும் பார்த்துவிட்டார்களா?...அக்காவுக்குத் தெரியுமா?...ஐயோ! சொல் லேன்"...என்று சுதாவின் கைகளைப் பிடிக்க வந்தான்.

சுதா:—ச்ச்ச்ச். பதட்டம் வேண்டாம்...முதலில் யோசனை இல் லாமல்செய்வதிலும் பிறகு இம்மாதிரி கலங்குவதிலும் என்னலாபம்? உங்கள் மனக்கொந்தளிப்பை டயரியில் எழுதினால்தான் தெரியுமா! அல்லது மனப் புயல் அடங்குமா...மனத்திற்குள்ளேயே அடக்கி வைப்பதுதான் உத்தமம். கிணற்று நீரை வெள்ளமா கொண்டு போய்விடும்...ஏதோ நல்ல வேளை ஒருவர் கண்ணிலும் படாதபடி ஸ்வாமி என் மூலமாகவே காப்பாற்றினர்.

தாமோ:—(கண்களில் நீர் முட்ட) ஸுதா!....இந்த பேராபத்தி லிருந்து என்னைக் காப்பாற்றியதற்கு நான் எப்படிதான் உனக்கு நன்றிகூற முடியும்?

ஸுதா:—மாமா!...இதென்ன கண்ணீர்?...பகவான் கண் திறந்து பார்த்து நம்மிருவரையும் பிணைத்துவைத்தால் அதுதான் பதினாயிரம் நன்றி செலுத்தியதாகும்.

தாமோ:—ஸுதா!...இது நடக்கக்கூடிய காரியமா?...என்னிதயத்தில் ஏன் இத்தகைய ஆழமான ப்ரேமையைக் கொடுத்து வதைக்கிறாய்? இது சொப்பனத்திலும் நடக்கக்கூடாத காரியமாயிற்றே...'பகவானே! என்னை சோதிப்பதோடு விட்டுவிடு. அந்த களங்கமற்ற இதயத்திலும் உன் திறமையைக் காட்டி விதைவிதைக்காதே'...என்று நான் அல்லும் பகலும் பகவானை வேண்டியதெல்லாம் வீணாகி மிஞ்சிவிடச்செய்து வேடிக்கை பார்க்கிறாரே! என்ன செய்வது ஸுதா!....

ஸுதா:—எந்தெந்த காலத்தில் எப்படி எப்படி நடத்தவேண்டுமென்று சட்டத்தை வகுத்திருக்கிறானோ பகவான் அந்தந்த விதந்தானே நடத்திச் சொல்வான் அதைவிட்டு வேறுவழியில்போவானா! அவன் விட்ட வழியாகட்டும். இவைகளை மனத்தில் நினைந்துநினைந்து துரும்பாகி உரு மாறுவது அழகல்ல...என்று கூறும்போது மணி எட்டு அடித்த ஓசை கேட்டு இருவரும் திடுக்கிட்டார்கள்.

தினம் 6 மணி முதல் 7 மணி வரையில் பாடம் சொல்லிக்கொண்டு போய்விடும் ஸுதா இன்று 8 மணியாகியும் பொழுது போவதே தெரியாதிருந்ததை அறிந்து தீயை மிதித்தவள்போல் துள்ளி எழுந்தாள்...

தாமோ:—தன்னையறியாமலேயே மனக்கொந்தளிப்பின் வேகத்தில் ஸுதாவின் அனுமதியின்றியே அவள் கைகளைப் பிடித்து இழுத்து கண்களில் ஒற்றிக்கொண்டு "ஸுதா!...போகிறாயா?"...

சுதா:—(கைகளை உதறிக்கொண்டு...தழதழத்த குரலில்) ஆம்...போறேன்...இனிமேல் டயரியில் எதுவும் எழுதவேண்டாம். அதை அஜாக்ரதையாகவும் வைத்து அகப்பட்டுக் கொள்ளவேண்டாம்....நான் வரட்டுமா"...என்று கூறி அவனை உற்று நோக்கினாள். அந்த பார்வையில் பொதிந்து கிடந்த ஆழமான அன்புச் சுடர் தாமோதரனின் உள்ளத்தைச் சிதறவடித்ததோடு அவன் உயிரையே கவ்விக்கொண்டு போவதுபோல் தோன்றியது. அடுத்த நிமிடமே ஸுதா புள்ளிமான்போல் துள்ளிக் குதித்தவாறு வெளியே வந்தாள்.

அதே சமயம் இவ்வறைப் பக்கத்தினின்றும் ஒரு உருவம் மெல்ல நகர்ந்து சென்றதைக் கண்டதும் அப்படியே நெருப்பை மிதித்தவள்போல் தத்தளித்து நின்றாள். அவளுடைய இதயம் நூறு மைல் வேகத்தில் போகும் மோட்டாரைப்போல் வேகமாக அடித்துக்கொண்டது.

சஞ்சிகை ரூபமாக சில நாவல்கள்

இவ்வாண்டின் புது நேயர்களில் பலர் சென்ற ஆண்டில் வெளியான உணர்ச்சி வெள்ளம், சந்தோஷ மலர் இரண்டும் சஞ்சிகை ரூபமாகக்கிடைக்குமாவென்று கேட்கிறார்கள். கொஞ்சம் காப்பிகளே எங்கள் கைவசமிருப்பதால் வேண்டியவர்கள் உடனே வருடச் சந்தா ரூ. 1—8 (வெளி நாடு ரூ 2. 3 ஷிலிங்) அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

இங்குக் குறித்துள்ள நாவல்களிலும் சில செட்டுகள் இருக்கின்றன.

ஜீவியச் சுழல்	அணா 10	மாலதி	அணா 4
கானல் நீர்	,, 10	படகோட்டி	,, 4

உடனே முந்துங்கள்

கீழ்க்கண்ட நாவல்களில் சில காபிகளில் பேபர் பழுத்திருப்பதால் அவற்றை பாதி விலைக்குக் கொடுக்கிறோம். தபாற் செலவு வேறு. கீழ்க்கண்ட 4 புத்தகங்களையும் ஒரே சமயத்தில் வாங்குபவர்கள் ரூ 4/- அனுப்பினால் தபாற் செலவின்றி அனுப்புகிறோம்.

	விலை.	குறைந்த விலை.	தபாற் செலவு உள் நாடு.	தபாற் செலவு வெளி நாடு.
வைதேகி	ரூ 2 8 0	ரூ 1 4 0	$4\frac{1}{2}$ அணா	$6\frac{3}{4}$ அணா
பத்மசுந்தரன்	2 8 0	1 4 0	4	6
சாரமதி	1 12 0	0 14 0	$2\frac{3}{4}$	$3\frac{3}{4}$
பரிமளகேசவன்	1 4 0	0 10 0	2	3

ஸெப்டம்பர் 25-ந் தேதிக்குள்

சேரும் சந்தாநேயர்களுடைய நம்பர்களைக் குலுக்கிப்போட்டு, 6 சீட்டுகளெடுத்து அவற்றிற்கு 7-வது இதழில் தெரிவித்தபடி புத்தகங்கள் பரிசாகக் கொடுக்கப்படும்.

சந்தாநேயர்களுக்கு ஒரு அபூர்வ சந்தர்ப்பம்

உடனே முந்துங்கள். எத்தனை புதிய சந்தாதாரர்களைச் சேர்த்தனுப்புகிறீர்களோ, அத்தனை எட்டணா விலையுள்ள நாவல்களை இனாமாகக் கொடுப்பதுடன் உங்களுடைய நம்பர்களும் சீட்டுக் குலுக்குவதில் சேர்த்துக்கொள்ளப்படும். பணம் அனுப்புகையில் வேண்டிய நாவல்களின் பெயரைத் தெரிவித்து, 8 அணா நாவலுக்கு ஒரு அணா வீதம் (வெளிநாடு $1\frac{1}{2}$ அணா) தபாற்செலவுக்காக சேர்த்தனுப்பவும்.

.............................இங்கே கத்தரிக்கவும்...........................

“ஜகன்மோகினி” மானேஜருக்கு,

இதனுடனிருக்கும் விவரப்படி, புது சந்தாநேயரை / ர்களைச் சேர்த்து ரூ...... போஸ்டல்ஆர்டர் கிராஸ்செய்து அனுப்பியிருப்பதைப் பெற்றுக்கொண்டு, நான் குறிப்பிட்டுள்ள இனாம் நாவலை / ல்களை அனுப்புவதுடன், எனது சந்தா நம்பரையும் சீட்டுக் குலுக்குவதில் சேர்த்துக்கொள்ளவும்.

சந்தா. ந:　　　　கையொப்பம்.

புது சந்தாநேயரின் விலாசம் :　　　　இனாம் நாவல்கள்.

"JAGANMOHINI" Vol. XVIII No. 8 Regd. No. M. 2210.

ஜகன்மோகினி 18 ஆவது ஆண்டு: 1941

முதல் ஐந்து இதழ்களில் புகழ்மாலை என்ற நாவல் வெளியாயிற்று. ஷை நாவல் ஒரே வால்யூமாக பைண்டு செய்யப்பட்டு ரூ. 1-4-0 க்கு விற்கப்படுகிறது. சஞ்சிகை ரூபமாக வேண்டுவோர் 10 அணுவுக்கு (5 கூபனுக்கு) பெறலாம். புதிதாகச் சந்தா சேர்வோர் ஜனவரியிலிருந்து பிரதிகள் வேண்டுமா அல்லது ஜூன் முதலாவென்பதைத் தெரிவிக்கவும்.

வருஷசந்தா உள்நாடு ரூ. 1-8-0. வெளிநாடு ரூ. 2/- (3 ஷிலிங்.)

ஸ்ரீமதி. வை. மு. கோதைநாயகி அம்மாள்

எழுதிய 54 நாவல்கள்.

ரூ. 2-8

வைதேகி
ராதாமணி
சாருலோசனா
பத்மசுந்தரன்
காதலின் கனி

ரூ. 2

நவநீதகிருஷ்ணன்
ருக்மிணீகாந்தன்
சாமளநாதன்
தியாகக்கொடி
மங்களபாரதி

ரூ. 1-12

சண்பகவிஜயம்
கௌரீமுகுந்தன்
ஸாரமதி

ரூ. 1-8

சோதனையின் கொடுமை
உணர்ச்சி வெள்ளம்
சந்தோஷ மலர்

ரூ. 1-4

பரிமளகேசவன்
உத்தமசீலன்
இன்பஜோதி
ராஜமோஹன்
அனாதைப்பெண்
வானக்குயில்
ஜீவியச்சுழல்
கஸ்தூரீதிலகம்
கானல் நீர்
ஆத்மசக்தி
புகழ்மாலை

ரூ. 1

சுகந்தபுஷ்பம்
சாந்தகுமாரி
மாயப்ரபஞ்சம்
சந்திரமண்டலம்
கருணையம்

அணு 14

கோபாலரத்னம்
புத்தியே புதையல்

அணு 12

கதம்பமாலை *

அணு 10

பட்டமோ பட்டம்
மகிழ்ச்சி உதயம்

அணு 8

நளினசேகரன்
வீரவஸந்தா
மூன்று வைரங்கள்
படாடோபத்தின் பரிபவம்
பிச்சைக்காரக் குடும்பம்
ஆனந்தஸாகர்
பிரேமப்ரபா
வத்ஸகுமார்
மாலதி
படகோட்டி

அணு 6

பத்மாவிகா

அணு 4

மாதவமணி
ஜெயஸஞ்சீவி
சுகுணபூஷணம்
அம்ருததாரா
அன்பின் சிகரம்
ஸரஸராஜன் *
உளுத்த இதயம்.

ஜகன்மோகினி
The J.M.O Motto
USEFUL ENTERTAINMENT
SOCIAL SERVICE & REFORM
JAGANMOHINI
THE JAGANMOHINI OFFICE
JOURNALISTS, PUBLISHERS
BOOKSELLERS & PRINTERS
26, CAR STREET, TRIPLICANE, MADRAS.
ESTD 1923
LEADING PUBLISHERS OF FAMOUS NOVELS
TAMIL MONTHLY
POPULAR THE WORLD OVER WHEREVER TAMIL IS READ
'Phone: 86019.

PRINTED & PUBLISHED BY V. M. PARTHASARATHY
AT "JAGANMOHINI" PRESS, 26, CAR STREET, TRIPLICANE, MADRAS.